# நகரத்தார் குரல்

( சமூக இலக்கிய மாத இதழ் )



சென்றுமுன் குன்றவர்கள் தந்தபெண் கொண்டுவளர்
செண்பகம் பைம்பொன்மலர் செறிசோலை
திங்களும் செங்கதிரும் மங்குலும் தங்குமுயர்
தென்பரங் குன்றிலுறை பெருமாளே !

— அருணகிரிநாதர்

நவம்பர் 1982

உ

சிவமயம்

# நகரத்தார் குரல்

(சமூக இலக்கிய மாத இதழ்)

கௌரவ ஆசிரியர்:
லெ. அழகுசுந்தரம் செட்டியார்

ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
சுப. அ. நடராசன் செட்டியார்

அலுவலகம் :
25, வடக்குச் சித்திரை வீதி,
மதுரை-625001

தொலைபேசி : p. p. 26668

குரல் 1
ஒலி 10

துந்துபி
ஐப்பசி

நவம்பர்
1982

வீடெலாம் இசையே; வீட்டில் நெஞ்செலாம் மெருகே; நெஞ்ச
ஏடெலாம் அறிவே; ஏட்டின் எழுத்தெலாம் களிப்பே; அந்தக்
காடெலாம் ஆடும் கூத்தே; காகங்கள் குருவி எல்லாம்
மாடெலாம் இவ்வா ருனல் மனிதர்க்கா கேட்க வேண்டும்!

— பாரதிதாசன் (குடும்ப விளக்கு)

கன்னியர்கள் வாழ்வுபெற மாலை
காளையர்கள் வாழ்வுயர வேலை

தனி இதழ் ரூ. 1-00
ஆண்டுச் சந்தா ரூ. 12-00



# பழ. கருப்பையாவிற்கு எங்கள் நன்றி

''நகரத்தார் குர''லின் அக்டோபர் '82 இதழைத் தயாரிக்கும் பொறுப்பை பழ. கருப்பையா அவர்களிடம் ஒப்படைத்திருந்தோம். நகரத்தார்கள், ஆச்சிமார்கள், பெரிதும் விரும்புகின்ற முறையிலே அதனை அவர்கள் மிகச் சிறப்பாகத் தயாரித்திருந்தார்கள். ஆச்சிமார்களின் பேட்டிக் கட்டுரைகளில் செட்டி நாட்டு மண்ணுக்கே உரித்தான பல சொற்களை, இயல்பான வாக்கியங்களை அவர்கள் அமைத்திருந்தது பலரும் பாராட்டும்படி இருந்தது.

பழ. கருப்பையா அவர்கள் சிறந்த அரசியல்வாதி; ஆணித்தரமாகப் பேசும் வல்லமை படைத்தவர்; அத்துடன் சிறந்த எழுத்தாளர் என்பதை நமது இதழின் மூலம் மெய்ப்பித்துள்ளார். பணம் சம்பாதிப்பதில் மட்டுமல்ல, புகழ் பெறுவதில் கூட, தான் மட்டும் புகழ்பெற்றால் போதாது, தன்னைச் சார்ந்தவர்களும் புகழ் பெற வேண்டுமென்ற பெருநோக்கோடு வாழ்ந்து வருபவர் பழ. கருப்பையா அவர்கள்.

ஏழு ஆண்டுகளுக்கு முன்பாக காவிரிப்பூம்பட்டினத்தில் பட்டினத்தார் திருவிழாவிலே நாங்கள் இருவரும் கலந்துகொண்டு பேசினோம். அப்போது எனக்கு அவ்வளவாகப் பேச வராது. (அதற்காக இப்பொழுது நான் சிறப்பாகப் பேசுகிறேன் என்று சொல்லவில்லை) அப்போதும் சரி இப்போதும் சரி சிறந்த மேடைப் பேச்சாளரான பழ. கருப்பையா அவர்கள் அப்போதே என்னைத் தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்தினர்கள். அதிலிருந்து தொடர்ந்து நான் ஒரு சிறிய காரியத்தைச் செய்தால்கூட என்னைப் பெருமைப் படுத்திக்கொண்டேயிருப்பார்கள்.

நகரத்தார் நலஉரிமை மாநாட்டிலேஅவர்கள் மிகவும் ஒத்துழைப்புத் தந்தார்கள். நகரத்தார் சங்கங்கள் எங்கெங்கு புதிதாகத் தோன்றுகின்றனவோ அங்கெங்கெல்லாம் சென்று அவர்கள் தம் பணியைச் சிறப்பாகச் செய்து வருகின்றார்கள்.

அமைச்சர்களையும் சர்வ கட்சியினரையும் அழைத்து தமிழ் அர்ச்சனை மாநாட்டை நடத்தியதே பழ. கருப்பையா அவர்கள்தான். அருள்மிகு மீனாட்சி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற அந்த மாநாட்டில் நான் அவர்களுக்கு உதவியாகத்தான் பணி புரிந்

தேன். அப்படியிருந்தும் சொக்கரும் மீனாட்சியும் தமிழ் அர்ச்சனை பற்றிப் பேசிக் கொண்டது போல கேள்வி-பதில் பகுதியில் ஒரு கற்பனையை உருவாக்கி அதற்குக் காரணம் 'நாகப்ப செட்டி சிதம்பரம்'தான் என்று அந்தப் பெருமையை எனக்கு அளித்திருக்கிறார்கள்.

பொறாமைக்காரர்கள் பெருகி வருகின்ற இந்த நாளிலே, பெருமைக்குரிய காரியங்களைச் செய்து, சிறப்பிற்குத் தானே காரணமாக இருந்தும் அந்தச் சிறப்பையெல்லாம் பிறருக்குத் தாரைவார்த்துத் தருகின்ற பண்பு பழ. கருப்பையா அவர்களுக்கு இருக்கிறதைப் பார்க்கிறபோது பழைய காலத்தில் சிறு கடைக்காரர்களை ஊக்குவித்து தங்களுக்குச் சமமாக அவர்களைக் கொண்டு வந்த பல பணக்காரர்கள் இன்னும் பழ. கருப்பையா அவர்கள் உருவில் நடமாடுவது என் கண்களுக்குத் தெரிகின்றது.

பலவகைச் சிறப்புக்களும்பெற்ற பழ. கருப்பையா அவர்களுக்கு எங்கள் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

—வி. என். சிதம்பரம்,
ஆசிரியர்.

பழ. கருப்பையா அவர்கள் பதிலளிக்கும் கேள்வி-பதில் பகுதி அடுத்த இதழில் இடம் பெறும்.

—ஆசிரியர்



# வாழையடி வாழை

வணிகரைச் 'செட்டி' என வழங்கும் பெயர் மிக்க பழமையானது. சிலப்பதிகாரத்தில் 'அரட்டன் செட்டி' என்ற ஒரு வணிகன் குறிக்கப்பெறுகின்ருன். ஆனுல் 'செட்டிப் பிள்ளை' என்ற பெயர், வணிகர்களுள் நாட்டுக் கோட்டை நகரத்தார்க்கு மட்டுமே வழங்கி வருகிறது. (தமிழ் லெக்சிகன்) காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து பாண்டி நாட்டில் குடியேறிய பின்பு இவர்கள் மற்ற வணிகர்களினின்று பிரிந்து, வேறு சாதியாராகி, தமக்குரிய சிறப்புப் பெயராக, 'நாட்டுக்கோட்டை நகரத்தார்' என்பதைச் சூட்டிக் கொண்டனர் என்று கொள்ள இடம் இருக்கிறது. 'செட்டிப் பிள்ளைகள்' என்ற பெயரும் அதன் பின்னரே இவர்களுக்கு வழங்கப் பெற்றிருக்க வேண்டும்.

இவர்கள் நமது குல முதல்வனுக குலத் தந்தையாக – உலக நாயகனுகிய சிவபெருமானையே கொண்டனர் என்று கூறினேம். சைவ மரபை ஒட்டி, இவர்கள் காவேரிப்பூம்பட்டினத்தில் இருந்த காலத்திலேயே மரகத விநாயகரைத் தம் குலத்துச் சொத்தாகவும், கடவுளாகவும் வைத்து வழிபட்டுவந்தனர். அதற்கு முன்னர், இவர்களின் முன்னேர் காஞ்சிபுரத்தில் வாழ்ந்தபோதே மரகத விநாயகரை வழிபட்டு வந்தனர் என்று 'நாட்டுக்கோட்டை நகரத்தார் சரித்திரம்' என்ற நூல் கூறும். மரகத விநாயகர் திருவுருவம் இப்பொழுது, நாகர்கோவில் பகுதியில் வாழும் செட்டியார்களிடம் இருக்கின்றது என்று கூறுவர். அவர்கள் கோட்டாற்றுக்கு அருகில் தேசிக விநாயகருக்குக் கோயில் அமைத்துத் தங்கள் குலதெய்வமாக வழிபட்டு வருகின்ருர்கள். (பிள்ளையார்பட்டியில் உள்ள பிள்ளையாரின்

**குருசீதரு**

பெயர், 'தேசி விநாயகர்' என்பதே.)

### வழிபடு கடவுள்

நாட்டுக்கோட்டை நகரத்தாரும் தமக்கு இன்றியமையாத வழிபடு கடவுளாக விநாயகரையே கொண்டனர். அவரைப் 'பிள்ளையார்' என்று வழங்கும் பெயரையே விருப்பத்தோடு ஏற்று வழங்கி வந்தனர். அவருக்கு 'மூத்த பிள்ளையார்' என்று இலக்கியத்தில் பெயர் வழங்கும். நகரத்தார் சிவபெருமானைத் தம் குலத் தந்தையாகக் கருதியதால், பிள்ளையாரைத் தமது மூத்த தமையனுகவும், முருகப் பெருமானை இளைய

தமையனுகவும் குடும்ப உறவு கொண்டு, அன்புடன் வழிபட்டு வந்தனர். அதனுலும், முருகப் பெருமானுக்குச் 'செட்டி' என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

### சடங்குகளும் காரணப் பெயர்களும்

நகரத்தார், பிள்ளையாரையும் முருகனையும் வழிபடுவதற்கென உள்ள விழாக்களைக் குடும்பவிழாக் களாக்கினர். சிவபிரானை வழிபடுவதையும் குடும்ப விழாவாக்கினர். பிற வணிக சாதியினரிடம் இவ்வழக்கம் இல்லை. நகரத்தார் தம் வீட்டில் பெண் குழந்தைகளுக்குச் செய்யும் சிறப்புச் சடங்காகிய 'திருவாதிரைப் புதுமை' சிவபிரானுக்கு உரிய விழாவாகும். சிவபிரானது நட்சத்திரம் திருவாதிரை. நகரத்தார் ஆண் குழந்தைக்குச் செய்யும் சிறப்புச் சடங்காகிய 'கார்த்திகைப் புதுமை' சிவ பிரானுக்கும் முருகனுக்கும் உரிய விழாவாகும். இதனைச் 'சூப்பிடி' என்று கூறுவர். இது 'சூழ்ப்பிடி' என்ற சொல்லின் மருவிய வடிவம் ஆகும். 'சூழ்ந்து' என்ற தீப்பந்தத்தை ஆண் குழந்தையின் கையில் கொடுத்துப் பிடிக்கச் செய்வதால், 'சூழ்ப்பிடி' என்ற பெயர் வந்தது. பிள்ளையாருக்கு உரிய வழிபாடாக நகரத்தார் செய்வது ஒரு நோன்பாகும். அது 'பிள்ளையார் நோன்பு' எனப்படும். முதலில் கூறிய இரண்டு விழாக்களையும் பின்னர் விளக்குவோம். முதலில் பிள்ளையாரை எண்ண வேண்டுவது சைவ மரபு ஆதலின், பிள்ளையார் நோன்பு பற்றி இங்கே கூறுவோம்.

### பிள்ளையார் நோன்பு

பிள்ளையார் கோவில் இல்லாத நகரத்தார் ஊரும் இல்லை; பிள்ளையார் நோன்பு கொண்டாடாத நகரத்தார் குடும்பமும் இல்லை. இந்த நோன்பு ஆண்டுதோறும் மார்கழி மாதத்தில் சதய நட்சத்திரமும் சஷ்டி திதியும் சேர்ந்து அமையும் நாளில் நகரத்தார் வீடுகளில் மட்டும் கொண்டாடப்பெறும். இவர்களின் செல்வாக்கினுல் யாழ்ப்பாணத்திலும் தமிழ் மக்கள் இதைக் கொண்டாடுகின்றனர்.

''பிள்ளையார்'' என்ற பெயர் சங்க காலத்தில் முருகனைக் குறித்தது. பின்புதான் விநாயகரைக் குறித்தது. அப்போதும் மூத்த பிள்ளையார் என்பதுதான் அவர் பெயர். பிறகு சுருக்கமாகப் பிள்ளையார் என்பதே அவர் பெயராகிவிட்டது. இப்பெயர் இரு கடவுளரையும் குறிப்பிடும் நயத்தை உணர்ந்த நகரத்தார், இந்த இருவரையும் இணைக்கும் சதய-சஷ்டி நாளில், இவர்களை இணைத்து ஒரு நோன்பை அமைத்தனர்.

### கந்த சஷ்டியும் சம்பா சஷ்டியும்

முருகன் கார்த்திகைப் பெண்களால் சரவணப் பொய்கையில் வளர்க்கப் பெற்றதால் 'கார்த்திகேயன்' எனப் பெறுவான். ஆதலால் கார்த்திகை மாதத்துத் திருக்கார்த்திகை நட்சத்திரம் அவனுக்கு உரியது ஆகிறது. அன்று தொடங்கி 21நாள் விரதம் (நோன்பு) இருந்து, இறுதிநாள் சஷ்டியும் சதயமும் சேரும் நாள் ஆதலால், அன்று இந்த விரத நிறைவைப் 'பிள்ளையார்நோன்பு' என்று கூறிக் கொண்டாடுகின்றனர். இந்த மார்கழி மாதச் சஷ்டி, விநாயகர் கஜமுகாசுரனை வதம் செய்தமையைக் கொண்டாடும் நாளும் ஆகும். ஐப்பசி மாதச் சஷ்டியாகிய கந்த சஷ்டியில் முருகன், சூரபன்மனை வதம்செய்தார். கார்த்திகைச் சஷ்டியில் வயிரவக் கடவுள் சம்பாசுரனை வதம் செய்தார். இது 'சம்பா சஷ்டி' எனப்

பெறும். வயிரவன்கோவில் நகரத்தார், தம் குல முதலாகிய வயிரவன் கோவிலில்,இந்த நன்னாளில் வயிரவக் கடவுளுக்கு சம்பா சஷ்டி விழாவைச் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர். (இப்பொழுது இவ்விழா நின்றிருக்கிறது.)

### பிள்ளையார் நோன்பும் கொண்டாடும் விதமும்

இப்பொழுது நகரத்தார் பிள்ளையார் நோன்பில் 21 நாள் விரதம் இருப்பதில்லை. நிறைவு நாளை மட்டும் கொண்டாடுகின்றனர். அன்றும் விரதம் இருப்பதில்லை. பகல் முழுதும் விரதமிருக்க வேண்டியது முறை. இரவில் பலவகைச் சிற்றுண்டிகளைப் பிள்ளையாருக்குப் படைத்து வழிபட்டுப் பின் குடும்பத்தார் அனைவரும் கூடியிருந்து குளிர்ந்து உண்ணுவார்கள்.

பிள்ளையார் நோன்பு அன்று குடும்பத்தார் எந்த ஊரில் இருந்தாலும், அவர்கள் அனைவரும் தமது சொந்த ஊரில், அல்லது குடும்பத் தலைவர் உள்ள ஊரில் ஒருங்கே கூடுவர். குடும்பத்திற்கு வாழ்வு அளிக்கும் மங்கலமான விழாவாக இது கருதப்படுகிறது. வகை வகையான சிற்றுண்டிகள் செய்வதோடு. பசும்பாலைக் கொண்டு 'திரட்டுப் பால்' (பால் கோவா) செய்வர். சில குடும்பங்களில் அரிசி மா, கருப்பட்டி, சுக்கு முதலியவற்றைக் கொண்டு 'கருப்பட்டிப் பணியார மாவு' செய்வர். புது ஆடை (கோடி) யிலிருந்து 21 இழை எடுத்துக் குடும்பத்தாரின் எண்ணிக்கைக்கு மேல் கூடுதலாக ஒன்று சேர்த்துத் திரிகள் செய்து கொள்ளுவர். ஒவ்வொரு திரியிலும் 21 இழைகள் இருக்கும். கூடுதலாகச் செய்துகொண்ட திரி பிள்ளையாருக்கு (பிள்ளையாரப் பச்சி) உரியதாகும். அவர் நகரத்தார் குலத்தில் மூத்த 'தமையன்

என்று கருதியதால் இவ்வழக்கம் உண்டாயிற்றுப் போலும்!

ஆவிரம் பூக்களையும் நெற்கதிரையும் கண்ணுப் பூக்களையும் சேர்த்து ஆவிரங்கோலில் செண்டு போலக் கட்டுவர். இவ்வாறு இரண்டு செண்டு கட்டுவர். அவற்றைச் சாமி வீட்டில் (வழிபாட்டு அறை) பிள்ளையார் திருவுருவத்திற்கு வலப்பக்கம் வைப்பர். நன்றாக முற்றிய ஆவிர மொட்டில் 21 மகரந்தக் கால்கள் இருப்பதால், செண்டு கட்டுவதற்கு அந்த மலர்களைத் தேர்ந்தெடுத்தனர். இதுவும் 21 இழை கொண்ட திரியும், நோன்புநாள் 21 என்பதைக் குறிக்கும் அடையாளங்கள் ஆகும்.

(தொடரும்)

## ஆறுமுகம்

அறிவு முகம்
அழகு முகம்
அன்பு முகம்
இளமை முகம்
இன்ப முகம்
வீர முகம்
முருகனின் படைவீடுகள்
ஆறு
முருகனின் முகங்கள் ஆறு
முருகனை வளர்த்த கார்த்தி
கைப் பெண்கள் அறுவர்
முருகனைத் துதிப்பதற்குக்
கவசங்கள் ஆறு

—''எவர்பிரைட்''

# குழந்தை மனம் கொண்ட குழந்தைக் கவிஞர்



''வட்டமான தட்டு; தட்டு நிறைய லட்டு''. ஆமாம் 'குழந்தைக் கவிஞர்' அழ. வள்ளியப்பா அவர்களின் இந்தப் பாடலை யார் தான் மறக்க முடியும்? 13 வயதில் கவிதை பாடத் தொடங்கிய அவர்கள், இதுவரை குழந்தைகளுக்காக 53 நூல்களைப் படைத்திருக்கிறார்கள்.

பள்ளிப் பருவத்தில் ''காணாத காடு'' என்ற திரைப்படச் சுவரொட்டியைக் கண்டு விட்டு,

''காணாத காடு
கண்டு விட்டால் ஓடு
ஒளிய இடம் தேடு''

என்று பாடியவர்கள் நம் குழந்

**பேட்டி:**
**வ. தேனப்பன்**

தைக் கவிஞர். மாணவர்கள், நண்பர்கள் பெற்றோர் அளித்த உற்சாகம் அவர்களை குழந்தைக் கவிஞராக்கி நாடும் ஏடும் போற்றுமளவிற்குச் செய்திருக்கிறது.

குழந்தைகளுக்காகவே எழுதி எழுதி 60 வயதிலும் குழந்தையாகவே இருக்கும் குழந்தைக் கவிஞரை அண்மையில் பேட்டி காணும் வாய்ப்புக் கிட்டியது. அதை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்வு கொள்கிறேன்.

நம் குழந்தைக் கவிஞர் கம்பனுடைய வழித்தோன்றல். கவிமணி ராஜாஜி, கல்கி, டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை, டாக்டர் மு. வ., நாமக்கல் கவிஞர், பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை போன்ற எண்ணற்ற அறிஞர்களின் பேரன்பையும் பாராட்டையும் பெற்றவர்கள்.

''உங்களது குருவாக நீங்கள் யாரை மதிக்கிறீர்கள்?'' எனக் கேட்டபோது—

''எனது இலக்கிய ஆசான் தி. ஜ. ர. தான். அவர்களது ஆதரவினால் தான் நான் ''சக்தி''



பத்திரிகையில் பொருளாளராகச் சேர்ந்தேன். அவர்களது வழி காட்டுதலினால் அப்போதெல்லாம் குழந்தைகளுக்காகக் கதை, கட்டுரை, நாவல்கள் எழுதினேன். பிறகுதான் நிறையக் கவிதைகள் எழுதலானேன்'' என்று பதில் தந்தார்கள்.

**வேறுபாடு**

''பெரியவர்களுக்காக எழுதும் கதை, கவிதைகளுக்கும் குழந்தை

களுக்காக எழுதும் கதை, கவிதை களுக்கும் என்ன வேறுபாடு? ''

''எளிமை தான் முக்கியமான வேறு பாடு. குழந்தைகளுக்கான படைப்புகளில் அவர்களுக்குப் புரியும் படியாக எளிமையான சொற்கள், எளிமையான நீதிகள், சாதாரண நிகழ்ச்சிகள் வேண்டும். குழந்தைகள் மனம் பூப்போன்றது. அவர்களுக்குக் கற்பிக்க வேண்டிய நீதிகளையெல்லாம் கதைகளாக மாற்றிச் சொல்ல வேண்டும்''

## குழந்தை எழுத்தாளர் சங்கம்

'' குழந்தை எழுத்தாளர் சங்கம் பற்றிச் சொல்லலாமா ? ''

''1950ல் குழந்தைகளுக்காக எழுதுவோரை ஒன்று சேர்த்து 'குழந்தை எழுத்தாளர் சங்க'த்தை ஏற்படுத்தினேன். இச்சங்கத்தின் மூலம் ஆண்டு தோறும் இரண்டு போட்டிகளை அறிவிக்கின்றோம். இந்த ஆண்டு சிறுகதை, நாடகப் போட்டிகளை நடத்துகின்றோம். ஏவி.எம். அறக்கட்டளையினர் தங்கப் பதக்கங்களையும் வெள்ளிப் பதக்கங்களையும் பரிசாக வழங்குகின்றார்கள். ஆண்டு தோறும் நவம்பர் 14 ஆம் தேதி ஜவஹர்லால் நேருவின் பிறந்த நாள் விழாவில் இப்பரிசுகளை வழங்குகின்றோம்.''

'' இராமாயணத்தில் வருகின்ற வாலி, எதிரியின் பலத்தின் பாதியை எடுத்துக்கொள்வான். அது போல தாங்கள் எதிரில் வந்தவர்களுக்குப் பாதி பலத்தைக் கொடுக்கிறீர்களோ ? ''

'' ஆண்டவன் கொடுக்கிறான்; நான் அதை எடுத்துக் கொடுக்கிறேன். அவ்வளவுதான். ''

நம் குழந்தைக் கவிஞர், பாலர் மலர், டமாரம், சங்கு, பூஞ்சோலை ஆகிய பத்திரிகைகளுக்கு கௌரவ ஆசிரியராக இருந்திருக்கிறார்கள்.

## பரிசுகள்

இவர்கள் எழுதிய முதல் நூல் 'மலரும் உள்ளம்' ஆகும். இவர்களது படைப்புகளில் இரண்டு நூல்கள் மத்திய அரசின் பரிசுகளையும் ஆறு நூல்கள் தமிழக அரசின் பரிசுகளையும் பெற்றுள்ளன.

1961ல் நடைபெற்ற குழந்தை இலக்கிய மாநாட்டில் டாக்டர் ஜாகீர் உசேன் அவர்கள் நம் குழந்தைக் கவிஞருக்குக் கேடயம் வழங்கிக் கௌரவித்தார்கள்.

1976ல் குழந்தை எழுத்தாளர் சங்க வெள்ளிவிழாவில் குடியரசுத் தலைவர் பக்ருதீன் அலி அகமது அவர்கள் இவர்களுக்குப் பொன்னாடை போர்த்திக் கேடயம் வழங்கினார்கள் என்பதிலும் நமக்குப் பெருமை.

இதுவரை ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களை எழுதியிருக்கும் இவர்கள் இப்போது '' சிரிக்கும் மலர்கள் '' என்ற கவிதைத் தொகுதியைத் தயாரித்து வருகிறார்கள்.

## பட்டங்கள்

' பிள்ளைக் கவியரசு ' ' மழலைக் கவிச்செம்மல்' 'தமிழ்ப் பேரவைச் செம்மல் ' போன்ற பட்டங்களைப் பெற்றுள்ள அழ. வள்ளியப்பா அவர்களின் பாடல்கள் தமிழ் நாட்டில் மட்டுமல்ல கேரளம், கர்நாடகம் போன்ற மாநிலங்களிலும் இலங்கை, தென்னாப் பிரிக்கா, மலேஷியா, சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளில் வெளியான நூல்களிலும் இடம் பெற்றுள்ளன.

## பட்டம் பெற்றவர்கள்

நம் குழந்தைக் கவிஞரின் கவிதைகளை திரு. வெ. கிருட்டிணசாமியும், திரு. கதி. கணேசனும் ஆராய்ச்சி செய்து மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்திலிருந்து 'எம். ஃபில்' பட்டம் பெற்றிருக்

கிறார்கள். திருமதி ஓ. பத்மகுமாரி என்பவர் கேரளப் பல்கலைக்கழகத்தில் 'எம். ஃபில்' பட்டம் பெற்றிருக்கிறார். திருமதி அம்புஜம் என்பவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் 'பி. எச். டி.' பட்டம் பெறவிருக்கிறார்.

அழ. வள்ளியப்பா அவர்களின் ''மலரும் உள்ளம்'' நூலைப் படித்த சரோஜினி மகிஷி என்பவர் கன்னட மொழியில் பல குழந்தைப் பாடல்களை எழுதி சாகித்ய அகடமி பரிசு பெற்றிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### 'பாட வந்த நிலா'

நமது குழந்தைக் கவிஞரின் வாழ்க்கை வரலாற்றை, சென்னை வைணவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருக்கும் டாக்டர் பூவண்ணன் அவர்கள் எழுதி 'பாட வந்த நிலா' என்ற தலைப்பில் நூலாக வெளியிட இருப்பது சாலச் சிறந்தது.

### மணிவிழா

4—11—82 அன்று மணி விழாக் கண்ட நம் குழந்தைக் கவிஞர் அடுத்தடுத்து பவள விழா, முத்து விழா, வைரவிழாக் காணவும் தமிழிலக்கியத்திற்குத் தொடர்ந்து சேவை புரியவும் மனதார வாழ்த்துவோம்.

# நகரத்தார் குலம்காக்க நாயகா! வரங்கள் தருக!

**கவிஞர் சிவல்புரி சிங்காரம்,** கீழச்சிவல்பட்டி.

ஆளாகிப் பலவருடம் தாய்வீட்டில் வாழ்கின்ற
அபலைக்கு வாழ்க்கை யிலையா?
அந்நாளில் பலபேரை ஆதரித் திருந்தயினம்
அமைதியைக் காண்ப திலையா?
வாழ்நாளில் உலகெங்கும் வடிவேலன் குடிகொள்ள
வைத்தயினம் வாழ்வ திலையா?
வந்துதவி கேட்டோர்க்கு இந்தா எனத்தந்த
வாரிசுகள் வளர்வ திலையா?

பாழாகிப் போனதொரு வீடாகி நிலைவிற்ற
பரிதாபம் காண விலையா?
பலருண்டு மகிழ்ந்தாட மடம்கட்டி வைத்தோர்கள்
பசிக்குரல் கேட்க விலையா?
மாலாகி வள்ளியவள் தோளோடு உறவாடும்
மால்மருகா வருக! வருக!
மறுபடியும் நகரத்தார் பழையநிலை யேற்றிடவே
மறுக்காமல் வரங்கள் தருக!

கைநீட்டிக் கேட்டோரின் கவலைகள் தீர்த்தயினம்
கைகட்டி வாழ்தல் முறையா?
கடல்தாண்டிச் சென்றன்று கனகமணி குவித்தோர்கள்
கஞ்சிக்கு ஏங்கல் முறையா?
செய்வதைச் சொன்னயினம் சொன்னதைச் செய்தயினம்
தேசத்தில் வாடல் முறையா?
சிறப்பான கல்விக்குக் கட்டிடம் தந்தயினம்
சேரமுடி யாதல் முறையா?

தெய்வங்கள் குடிகொள்ள ஆலயம் தந்தயினம்
தெருவினில் வாடல் முறையா?
செட்டாக வாழ்ந்தன்று செட்டியா ரானயினம்
செல்லரித் திருத்தல் முறையா?
வைதார்க்கும் நல்லதொரு வாழ்க்கையினைத் தருகின்ற
வடிவேலா வருக! வருக!
மறுபடியும் நகரத்தார் பழையநிலை யேற்றிடவே
மறுக்காமல் வரங்கள் தருக!

# அவன் அவள் அது



பேராசிரியர் கனை. சிறிசபேசன்

## அவன்

எனது படிப்பினுல் நான்கொண்டிருந்த கர்வம் அந்த ஒரே விஞடியில் தூளாகும் என்று நான் கொஞ்சமும் எண்ணவில்லே. நான் படித்த பள்ளியிலும் கல்லூரியிலும் என் புகழ் வானளாவப் பறந்தது உண்மை. இப்போது இன்றைக்கு அது வானத்துக்கு அப்பாலும் பறந்து விட்டதும் சத்தியம். நான் கல்வி கற்ற காலத்தில் அடிக்கொருமுறை என்னே அழைக்காவிட்டால் எனது ஆசிரியர்க்குத் தூக்கமே வராது. இது எனது சக மாணவர்களின் கேலி. எனது தாய்? ஆம் எனது ஏழ்மையை எனக்குத் தெரியாமல் வளர்த்த தெய்வம். ஆம், என்னேயும் ஏழ்மையையுமே வளர்த்தாள்—எனக்கே தெரியாமல்! தந்தை? அப்படி என்ருல் யார்? என்ன? நல்லவராம் அவர்! அவராக அப்படிச் செய்யவில்லேயாம். வேண்டுமென்றே செய்யவில்லேயாம். ஆனுல் வேண்டாமென்று செய்து விட்டார், எங்களே. ஏதோ காலக் கோளாறும் எங்கள் தலேவிதியும் சேர்ந்துதான் அவர் அப்படிச் செய்யக் காரணமாம். தந்தை இல்லே என்ற குறையை நான் என்றும் உணர்ந்ததில்லே. என்னே நான் அப்படிப் பக்குவப்படுத்திக் கொண்டிருந்தேன். இளமையிலேயே அப்படியொரு பக்குவமும் பண்பாடும் எனக்குள் உருவாகி விட்டன. பிற இளேஞர்கள் ஒளித்துப் படிக்கும் கதைகள் எனக்குப் பிடிப்பதில்லே. காதல் கதைகள் எனக்கு அருவருப்பையே தந்தன காந்தியின் 'சத்திய சோதனே' எனக்கு இனித்தது—அவருக்கும் இனித்ததுதானே! திரு.வி.க.வின் கனத்த நூல்கள் எனக்கு நொய் தாகத் தோன்றின. அதிகாலேயில் எழுதுவது—திசை நோக்கித் தொழுவது அன்னேயின் காலில் விழுவது - இவை எனக்கு இனித்தன. தேவாரமும் திருவாசகமும் எனக்குக் கற்கண்டுகள். பெரிய புராணத் திருத் தொண்டர்கள் எனக்குத் தெய்வங்கள். எளிய இனிய கதராடையே எனக்குச் சோபிதம். எளிய உணவே எனக்கு அமுதம்.

சிறுகதை

இதனுல் எனக்குக் கிடைத்த உயர்ந்த பெயர்—சாமியார். தாழ்வான பெயர்—பண்டாரம். தாய் என்ற பல்கலேக் கழகம் எனக்குச் சூட்டிய பட்டம்—'என் செல்ல ராஜா'. இந்த 'செல்ல ராஜா'வை ஒரு பெண் ஒரு விஞடியில் என்ன பாடுபடுத்தி கர்வ பங்கம் செய்து விட்டாள்!

## அவள்

கடவுளே! கடவுளே! இப்படியும் ஒரு 'மக்கு' உலகில் உண்டா? 'மண்டு'. கல்லூரியில், ஏன், பல்கலேக் கழகத்திலேயே முதல் மாணவராமே. வரவர இந்தப்

பல்கலைக் கழகங்கள் ரொம்பத் தான் கெட்டுவிட்டன. சும்மா சுற்றுகிறவர்களுக்குப் பெருமையே கிடைப்பதில்லை. இந்தமாதிரி 'மக்கு'களுக்குத்தான் காலம். அதன் புகழ் அந்தக் கல்லூரியில் நன்குதான் பரவிக்கிடந்தது படிப்பிலும் பண்பிலும் முதலாம். பணிவிலும் அடக்கத்திலும் கடைசியாம். கொஞ்சமும் வாயில்லாப் பூச்சியாம். அதுக்குப் பிடித்த நூல்கள் சத்திய சோதனை, அருள் வேட்டல், பெரியபுராணம். பஞ்சாங்கம்! அதுவும் மிகப் பழைய பஞ்சாங்கம்.

என் தோழிகளின் 'சலகல' என் காதுகளில் இப்போதும் ஒலிக்கிறது. ''ஏண்டீ போயும் போயும் அந்தச் சாமியாரைப் போயீ நீ....'' எனது விழித்தீயில் அவர்களது சிரிப்பூ வாடுகிறது. நான் சிந்திக்கிறேன்—முதன் முறையாக உண்மைதான். அந்தச் சாமியார் பண்டாரம்— அதனிடம் என்ன இருக்கிறது? என்ன இருக்கிறதா? இப்போது என் மனசு அதனிடம் தான் இருக்கிறது. பாவம் சாமியார். அதை—என் மனசை வைத்துக்கொண்டு படுகிற பாடு! இன்றைக்கு என் மனசு அவரிடம் இருப்பதுசரி. அன்று என்ன இருக்கிறதென்று போய் அவரிடம் சிக்சிக் கொண்டது? குழந்தைப் பருவ முதல் என்னுடன் வளர்ந்த சாத்வீகத்தை எங்கள் வீட்டிலுள்ள மர-கண்ணாடிச் சாமான்கள் இன்னும் பேசும். பாவம் ஒன்று கூட உருப்படியாக முழுசாக இருக்காது. நான் மட்டும் இப்போது முழுசாகவா இருக்கிறேன். அரை மேனியாகப் போய்விட்டேனும். எனக்கு இப்போது உடம்புக்கு என்னவோவாம். இது என் வீட்டிலுள்ள மற்ற மக்குகளின் கணிப்பு. நான் கல்லூரியில் படித்த போது--படுத்திய பாடு யாரை? யாரைத்தான் படுத்தவில்லை. நானகப் படுத்த மாட்டேன்.

பின் என்னவாம். ஒரு ஆசிரியை (மன்னிக்கவும் யார் பெயரும் எனக்குத் தெரியாது) பாடம் நடத்தும்போது அதுவும் சிலப்பதிகாரம் நடத்தும்போது அப்படி உளறினால் எனக்குக் கோபம் வராதா என்ன? என் தலைவிதி. அன்றைக்கென்று நான் வகுப்பில் பாடத்தைக் கவனித்திருக்கிறேன்.

''அந் நள்ளிரவு முழுவதும் தூங்காமல் கிடந்த கோவலன் விடிவதற்கு முன்பே சீதையைக் கூட்டிக் கொண்டு கானகம் புறப்பட்டான்''—ஆசிரியை.

யார்? யாரைக் கூட்டிக் கொண்டு? கோவலன் சீதையைக் கூட்டிக் கொண்டு.

மாணவியர் 'கொல்' என்று சிரித்தார்கள். ஆம், கோவலனைக் கொல் என்று சிரித்தார்கள். தன் தவற்றை ஆசிரியை திருத்திக் கொள்ளு முன்பு நான் திடீரென்று ஸ்பிரிங்காகக் குதித்தேன் ''யார் யாரைக் கூட்டிண்டு போனுன்னு கூட உங்களுக்குத் தெரியலையே மேடம்'' என்றேன். அவ்வளவு தான் ''யார் யாரைக் கூட்டிண்டு போன உனக்கென்ன. யூ...டாம் இட். யூ கெட் அவுட். ஐ ஸே'' என்று மெல்லத்தான் இரைந்தார். அந்தச் சத்தத்தில் வகுப்பு அறையில் மூலையில் ஒரு வெடிப்பு உண்டாயிற்று. என் தலைவிதி. இதனுல் எல்லாம் எனக்கு 'ரவுடி ரங்கம்மா' என்று பெயர். ஆனல் எங்கள் கல்லூரி முதல்விக்கு என் மீது ஆழ்ந்த கருணை உண்டு. ''நல்லாப் படிக்கிறே; ஆன கொஞ்சம் வாலை மட்டும் உள்ளே வைச்சுக்கப்படாதோ'' என்பார்கள். இந்த வாலு போயீ எப்படிச் சாமியார்கிட்டே—ஐ ஆம் ஸாரி-பண்டாரத்துக்கிட்டே மாட்டிக்கொண்டது என்பதுதான் ஊராரின் பெருஞ் சந்தேகம். இந்தச் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளாமல் எங்கள் ஊரில் யாரும் தூங்குவதில்லை என்று சபதம் ஏற்றுக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குச் சபதம் — அதனுல்

தூங்குவதில்லை. ஆனால் எனக்கும் அதுக்கும் என்ன சபதம். ஏன் தூங்குவதில்லை?

## அது

எனக்கு ஒரே கால்வலி. பின் என்ன? ஆறு கால்களில் ஐந்து கால் பழுதாகி ஆட்டங்கட்டு விட்டால் இருக்கும் ஒரு கால் வலிக்காதா? நான் கிடந்தது—கிடப்பது—இன்னும் கிடக்கப்போவது எல்லாமே அந்த அலுவலக வராண்டாவில். ஏதோ, அன்றைக்கு இந்த ஆங்கிலத்தை அறைகுறையாகக் கற்று கொண்டதால் தான் 'மானேஜர்' என்பவரின் அறைக்கு எதிரே நான் தவங்கிடப்பது எனக்குப் புரிகிறது. நான் ரொம்பப் பசையுள்ளவன். அலுவலகத்திலிருந்து செல்லும் தபால்களை என் மீது வைத்துத்தான் கோந்து அடிப்பார்கள். என் மீது எத்தனை யெத்தனை வண்ணங்கள்! அன்று கூட என்மீது அமர்ந்திருந்த இரண்டு பெண்கள் பேசிக்கொண்டார்கள்: ஒருத்தி, ''டீ...பாரேன் இந்தப் பெஞ்சிலே எத்தனை வண்ணங்கள்! எத்தனை கோலங்கள்! நம்ம சேலைகள் தோத்துப் போகும் போ''. என் மீது வந்து அமரும் 'சேலை'களில் எத்தனை 'சேலை'கள் தோற்றுப் போகின்றன என்று எனக்குத் தெரியாது. ஆனால் அன்றைக்கு அந்த ஒரே ஒரு சேலை தோற்றுப் போனது மட்டும் உண்மை. அது தோற்றுப் போகப் போவது எனக்குத் தெளிவாகப் புரிந்தது. முதலில் என்னவோ வந்து என் மீது ஆரோகணித்தது அந்த வண்ணச் 'சேலை'தான். அது ரொம்ப ரொம்பக் குறும்பு. கண்ணுர அந்தக் கதராடையைக் கண்டது. மெல்ல என் மீது நகர்ந்து ஒரு ஓரமாக அமர்ந்தது அந்தச் சேலை. கதராடைக்கு ஒதுங்கி இடங் கொடுக்கிறதாம் அப்படி. அந்தக் கதராடை மீது என் கவனம் விழுகிறது. அடடா! என்ன இனிமை! எளிமை! பண்பாடு. அதன் ஸ்பரிசத்திற்காக எனக்குள் கூட ஒரு ஏக்கம். அந்தச் 'சேலை' நகர்ந்து உட்கார்ந்ததும் நான் கிரீச்சிட்டு அந்தக் 'கதராடையை' என் மீது அமர அழைத்தேன். ஊஹூம். எனது க்ரீச் ஒலியும் அவளது களைப்பும் அந்தக் கதராடையின் தவத்தைக் கலைக்க வில்லை. ஆனால் அந்தச் சேலைக்கு ரொம்பத்தான் கர்வம். கால் மீது கால் போட்டுக் கொண்டு, பெரிய ராணி தோரணை. கடைசியில் அது பேசியே விட்டது.

''நீங்களும் இண்டர்வ்யூவிற்கு வந்தீர்களா?''— இது சேலையின் வினை.

''ஆம்''—கதராடையின் பதில்

''எத்தனை, வேக்கன்ஸி தெரியுமா உங்களுக்கு?''— மீண்டும் சேலை.

''தெரியாது''— கதரின் பதில்.

''பார் இன்ஃபர்மேஷன். ஒரே ஒரு இடம்தான் காலியிருக்கிறது. அதற்கு என்னைத் தேர்ந்து எடுத்து விட்டார்கள். ஆணையை டைப் அடித்துக் கையில் தருவதாகச் சொல்லி என்னைக் காக்க வைத்திருக்கிறார்கள். எனக்கு ....... சிபாரிசு. உங்களுக்கு?''

அவ்வளவும் பொய். நான் 'கிரீச்', 'கிரீச்' என்று எவ்வளவு அலறி அவளது பொய்யை அம்பலப்படுத்தினாலும் கதராடை பாவம், புரிந்து கொள்ளவே இல்லை. ஒரே ஓட்டமாக ஓடிவிட்டது. ஏதோ மக்கள் பேசிக்கொள்கிறார்களே 'தலையும் தெரியவில்லை, காலும் தெரியவில்லை' யென்று. அப்படியொரு ஓட்டம்.

பிறகுதான் ஒரே வேடிக்கை. அந்தச் 'சேலை' வெகுநேரம் வரை என் மீது அமர்ந்திருந்தது. என் மீது திடீரென்று விழுந்த இரண்டு துளிகள் தீயாகச் சுட்டன. அட கழுதை, அந்தச் 'சேலை' அழுதிருக்கிறது. அழு, அழு, நன்றாக

## நகரத்தாரும் தர்மமும்!

தமிழ் நாட்டில் அதிகமாகத் தர்மம் செய்தது நகரத்தார் சமூகம்தான். நம் முன்னோர்கள் வாழ்ந்த முறையை வைத்து நம்மை மற்றவர்கள் மதிக்கிறார்கள். விலைக்கு வாங்க முடியாதவன் இறைவன். இறை வழிபாடு நகரத்தாரின் பண்பாடாகும். கடவுள் நம்பிக்கை இருப்பதால்தான் நம்மில் கிரிமினல் குற்றவாளிகள் தோன்றவில்லை.

—பழ. கருப்பையா
(மதுரை நகரத்தார் சங்கக் கூட்டத்தில்)

ஃ ஃ

## யாருக்கு செருக்கு இருக்கும்?

பணம், அறிவு, வீரம் ஆகிய மூன்றும் இருப்பவர்களுக்குத்தான் செருக்கு இருக்கும். இம்மூன்றிலும் பணம் மிகவும் வலிமை வாய்ந்தது. இதைத் தொல்காப்பியரே ஒப்புக் கொண்டிருக்கிறார்.

—பழ. கருப்பையா
(மதுரை நகரத்தார் சங்கக் கூட்டத்தில்)

அழு. திடீரென்று ஒரு திருப்பம். வந்த அந்தப் பணியாளிடம்—மானேஜர் வேறு—அவன் வேறில்லை— அவ்வளவு செல்வாக்கு உடையவன், அவனிடம் அந்தச் 'சேலை' பரபரப்பாக ஏதோ பேசியது. ''ஊம்... ஊம்... அவரு தான், கதர்ச் சட்டை போட்டிருந்தாரே அவர், எளிய இனிய பண்பாளர். ஊம். அவரு விலாசம் எனக்கு அவசியம் வேண்டும்'' என்று கேட்டது சேலை.

''ஏன் அவர் உங்களுக்குச் சொந்தமா?'' பணியாளனின் பணியாத கேள்வி.

''ஆமா, அப்படித்தான் வைச்சுக்கோயேன்''–அந்தச் சேலை.

''சொந்தக்காரர்னா அவர் விலாசம் உங்களுக்குத் 'தெரியாமல் இருக்குமா,ஏம்மா சும்மா டபாய்க்கிறே''— பணியாளனின் வெற்றி வாகைக் கேள்வி.

அந்தச்சேலை அந்தப் பணியாளனிடம் கெஞ்சியது, மன்றாடியது. ஊஹூம் ஒன்றும் பலிக்கவில்லை.

சலாமும் விலாசமும் அந்தப் பணியாளனிடம் பெற்றுத் தந்தது அந்தச் சிறு தாள். அதில் பல வண்ணங்கள் 'பத்து ரூபாய்' என்று நடுவில் அச்சிட்டிருந்தது.

''துட்டுக்காக இந்த விலாசத்தை உனக்குத் தரேன்னு நினைச்சுக்காதே அம்மே, ஏதோ பாவமேன்னு தாரேன்''

சீட்டு கை மாறியது. சிட்டாய்ப் பறந்தது அந்தச் சேலை.

செட்டி நாட்டரசர் தமிழிசை இயக்கத்தைத் தொடங்கியிராவிட்டால் அது எப்போதோ அழிந்து போயிருக்கும்.

—கவிஞர் முடியரசன்
(மதுரை நகரத்தார் சங்கக் கூட்டத்தில்)




நம் நகரத்தார் சமூகத்தில் உள்ள நடுத்தர, ஏழை மக்கள் சீதனம், மாமியார் சாமான் போன்ற, நம்மிடையே வழக்கமாக உள்ள கொடுக்கல் வாங்கல் முறைதலைகளால் எவ்வளவு அல்லற்படுகிறார்கள், அவர்களது மற்ற பிரச்னைகள் என்ன, அவற்றை எப்படிச் சமாளிக்கலாம், நமது பழக்க வழக்கங்கள் என்னென்ன, காலத்திற்கேற்ப அவற்றை நாம் மாற்றியமைத்துக் கொள்ளலாமா என்பன போன்ற பல முக்கிய விஷயங்களை முன் வைத்து நம் ஆச்சிமார்களைக் கண்டு பேசி ''நகரத்தார் குரல்'' அக்டோபர் இதழில் பழ.கருப்பையா அவர்கள் பேட்டி வெளியிட்டு செட்டி நாட்டையே ஒரு கலக்குக் கலக்கி விட்டார்கள். அவர்களது அந்தப் புதிய முயற்சிக்கு மகத்தான வரவேற்பிருந்ததை எமக்கு வந்த ஏராளமான தொலைபேசிகளும் நூற்றுக்கணக்கான கடிதங்களும் எடுத்துக் காட்டுகின்றன.

அதனைத் தொடர்ந்து இந்த இதழிலும் சில ஆச்சிமார்களைப் பேட்டி கண்டு அவர்களது கருத்துக்களை வெளியிட்டிருக்கிறோம்.

நாங்கள் எப்போதும் ஆச்சிமார்களைத்தான் சந்திப்போம்; அவர்களது கருத்துக்களைத்தான் வெளியிடுவோம் என்று யாரும் எண்ண வேண்டாம். ஆச்சிமார்களை மட்டுமல்ல, நம்மவரில் கல்லூரி மாணவர்கள், கல்லூரி மாணவிகள், பெரியவர்கள் என்று பலதரப்பட்டவர்களையும் நாங்கள் சந்திக்க இருக்கிறோம். நம்மவர்கள் எங்கெங்கு இருக்கிறார்களோ அங்கங்கெல்லாம் நாங்கள் வருவோம்; பேட்டி காண்போம்; வெளியிடுவோம். எனவே உங்களது கருத்துக்களைத் துணிந்து சொல்லுங்கள். அதனால் உங்களது கருத்துக்களைப் பலரும் அறிந்து கொள்வதற்கு மட்டுமல்ல பலர் தங்களைத் திருத்திக்கொள்வதற்கும் வாய்ப்பேற்படும்.

## மீனாட்சி ஆச்சி

(நாச்சியாபுரத்தில் பிறந்து ஆவினிப்பட்டியில் வாழ்க்கைப்பட்டவர். இவரது கணவர் எஸ்பி. செல்வகேசரி செட்டியார் அவர்கள் மதுரை ஐஸ்வர்யா சிட்பண்டு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர்.)

''சீதனம், மாமியார் சாமான் கொடுக்க முடியாம நம்மள்ளே பல நடுத்தர ஏழைக் குடும்பங்க சிரமப்படுதே, அது இல்லாம அல்லது கொஞ்சம் கொறைச்சுக் கொடுத்து கலியாணம் செய்ய என்ன செய்யலாம்?''

''நமக்குள்ளே கட்டுப்பாடு கொண்டு வந்து அதை நடைமுறைப்படுத்தணும். என்னைப் பொறுத்த வரை நான் என் பையனுக்கு இந்தரூபாயெல்லாம் வாங்கறதா இல்லே. என் பெண்ணுக்குச் சேயற போது கேட்டாகி கொடுப்பேன். வலையபட்டிப் பக்கந்தான் அதிகமா தொகைபகைகள் கேக்கிருக. ஆனா அந்தப் பக்கம் பின் மொறைக கம்மி. மனக் கட்டுப்பாடு வந்திருச்சுன்னா பிரச்னைகளே வராது''

''கழுத்துரு செஞ்சு கொடுக்கிறதுனாலே பணந்தான் முடக்கப்படுது, அதைப் போட்டுக்கிறதும் இல்லே. இப்ப தங்க வெலையும் கண்டபடி ஏறிப் போச்சு. அதனாலே அது வேண்டாம்னு சில பேர் நெனைக்கிருங்களே?''

''இல்லே. கழுத்துரு அவசியந்தான். அது தாலியாச்சே. கட்டாயம் செய்யத்தான் வேணும். 40, 50 பவுன்லே இல்லேன்னாலும் 10, 11 பவுன்லேயாவது செஞ்சு கொடுக்கணும். பெண்ணுக்கு நகைகள் போடுறது அவங்க அவங்க இஷ்டம். பண வசதிக் கொறைச்சலாலே என் கூடப் படிச்ச பல பெண்ணுகளுக்கு 35 வயசாகியும் இன்னும் கலியாணம் நடக்கலே. பாவம்...''

''சடங்கு மொறைக அதிகமா இருக்கிறதுனாலேதான் கொடுக்கல் வாங்கல் மொறைகளும் அதிகமாப் போச்சுங்கிருகளே ...?''

''சடங்குகள் வேண்டியதுதான். மொறைகளை வாங்காமலே அதைச் செய்யலாமே! எனக்குச் சடங்கு மொறைகள் சரியாத் தெரியாது. ஆனாலும் பெரியவங்களைக் கேட்டு அதைச் செய்யோணும்னு விரும்பறேன்''

''இந்த மருந்து குடிக்கிறது... அதுக்காகன்னு ஒரு கூட்டத்தைக் கூட்டுறது... இதெல்லாம் இப்பத் தேவைதானா?''

''எங்க வீட்டுலே நான் மருந்து குடிக்கலே. எனக்கு ரெண்டு புள்ளைகள் பொறந்திருக்கு. நாங்க நல்லாத்தான் இருக்கோம். அது தேவையில்லேதான்.''

(செல்வகேசரிசெட்டியார் அவர்கள் தம் அன்பு மனைவியைப் பார்த்து ஒருபுன்முறுவலை வெளிப்படுத்துகிருர்கள்)

''கல்யாணங்கள்ளே சடங்குப் பெட்டி வைக்கிறது...''

''எங்க பக்கம் அதெல்லாம் இல்லை'' (இதுபோல் முறைதலை தொடர்புள்ள கேள்விகளுக்கெல்லாம் ''அதெல்லாம் இல்லை; இதெல்லாம் இல்லை'' என்று சொன்னால் செலவுகள் குறையுமே!)

''முறைச்சிட்டைன்னு ஒண்ணு எழுதி முறையில்லாம பெண்ணைப் பெத்தவங்ககிட்டே கசக்கிப் பிழியருங்களே, அதைப் பத்தி...''

''முறைச் சிட்டையை நான் வெறுக்கறேன். இதை, பேட்டி காண வந்த உங்ககிட்டே நான் பெருமைக்காகச் சொல்லலே. என்னைப் பொறுத்தவரை நான் முறைச் சிட்டையே எழுத மாட்டேன்.''

''இந்த மாப்பிள்ளைப் பலகாரங்கள் செய்து குடுப்பது பத்தி...''

''அது பிளடி வேஸ்ட். என் ரெண்டு சிஸ்டர்கள் கலியாணத்துக்கு முன்னே எங்கம்மா இறந்திட்டாங்க. நாங்க எந்தையும் செஞ்சு கொடுக்க முடியலே. அதனாலே அதுக்குப் பணந்தான் கொடுத்தோம்.''

''பிள்ளைகள் அதிகமாப் பெத்துக்கிறது நல்லதா...?''

''எங்களுக்கு ரெண்டு புள்ளைகள். ஆண் ஒண்ணு; பெண் ஒண்ணு. அதனாலேதான் அவங்களை நல்லபடியாக கெவனிச்சு

வளக்க முடியுது. ஆக்வே ஒண்ணு ரெண்டு போதும்.

(இப்படிக் கூறிக்கொண்டே செட்டியார் அவர்களை ஆச்சி ஓரக் கண்ணால் பார்க்கிறார். செட்டியாரவர்கள் ஒரு புன்முறுவலை மட்டும் வீசுகிறார்கள்)

''பணக்காரங்க பணக்காரங்களோடு சம்பந்தம் பண்ணும தங்களைவிடக் கொஞ்சம் வசதிக் குறைச்சலானவங்களோடு சம்பந்தம் பண்ணினா ஏற்றத் தாழ்வு குறையுமே?''

''பணங்காரங்க தங்களைவிட வசதிக் குறைச்சலான வீட்டுலே சம்பந்தம் பண்ண விரும்பமாட்டாங்க. அப்படிச் செய்யப்போனா சண்ட சச்சரவுதான் வரும். ஒருத்தருக் கொருத்தர் அட்ஜஸ்ட் பண்ணிக்க முடியாது. செலவுக்குப் பணமில்லே; வேலைக்கு ஆள் இல்லே அப்படி இப்படின்னு சண்டை வந்திடும்.''

''பொதுவா நம்ம வீடுகள்ளே ஆச்சிகளின் பேச்சுக்கு அதிகமா மதிப்பு இருக்கே அது ஏன்?''

''எங்க வீட்டைப் பொறுத்த வரை வீட்டு விஷயங்களை நான் கெவனிச்சுக்கிறேன். ஆபீஸ் விஷயங்களை அவங்க கெவனிச்சுகிறாங்க. ஒருத்த விஷயத்திலே ஒருத்த தலையிடுறதில்லே. அதனாலே வீட்டுலே என்னைக்கேட்டுத் தான் அவங்க எதுவும் செய்வாங்க. மலேஷியாவிலே ஒரு வருஷம் 6 மாசம்னு செட்டியாருக இருந்துடறதினாலே வீட்டுப் பொறுப்பு ஆச்சிமார்கள்கிட்டே வந்திருச்சுன்னு நெனைக்கிறேன்.''

''நம்ம சமூகம் முன்னேற பண வசதி படைச்சவங்க எப்படி உதவலாம்?''

''உங்க 'நகரத்தார் குரல்' பத்திரிகை மூலமா பணம் வசூல் செஞ்சு வருஷத்துக்கு இத்தனை ஏழைப் பொண்ணுக்குன்னு கலியாணத்துக்குக் கொடுக்கலாம். பணக்காரங்க வருஷத்துக்கு ஒரு பொண்ணு வீதம் செஞ்சு வைக்கலாம். படிச்ச, பணக்காரப் பொண்ணுக ஒண்ணு சேர்ந்து பொண்ணுகளுக்குன்னு ஒரு சங்கம் அமைச்சு மாசாமாசம் கலந்து பேசி ஒரு நல்லமுடிவு காணலாம். அந்த மாதிரி சங்கம் அமைக்க என்னாலான உதவியைச் செய்ய நான் தயாரா இருக்கேன்''

''நம்ம சாதிக்குள்ளேயே காதல் திருமணம் செஞ்சு வச்சா பணப் பிரச்னை ஓரளவு தீரும்னு சொல்றுகளே?''

''எங்க குடும்பத்துக்குள்ளேயே ஒரு காதல் கல்யாணம் நடந்திருக்கு. அது நல்லபடியா முடிஞ்சா நல்லதுதான்.''

# சிவகாமி ஆச்சி

(கோட்டையூரில் பிறந்து காரைக்குடியில் வாழ்க்கைப்பட்டவர். இவரது கணவர் திரு. ஏ. மெய்யப்ப செட்டியார், மதுரை லெட்சுமி பேப்பர் ஸ்டோர்ஸில் மானேஜராக இருக்கிறார்.)

''நம்ம பொண்ணுக கலியாணங்கள்லே அதிகமாச் செலவு வருது. முக்கியமா இந்த மாமியார் சாமான், சீதனம், நகைகள் பல பேரை வாட்டி வதைக்கிதே, அதுக்கு என்ன செய்யலாம்?''

''அதுக்கு கலியாணம் செஞ்சுக்கப்போற பையன்கள்தான் முடிவு செய்யணும். பல ஊர்கள்லே, நிறையப் பணம் கேக்கச் சொல்லி பெத்தவங்களையே அவுங்க புள்ளைங்க வற்புறுத்தறாங்க.''

'' சடங்கு முறைகளைக் குறைக் கலாமா? ''

'' அதைவிடச் செய்யாத சடங் குகளுக்குப் பணம் கேக்கிற அநி யாயத்தைக் கட்டுப்படுத்தணும் ''

'' மருந்து குடிக்கிருங்களே அந் தச் செலவு அனுவசியந்தானே? ''

'' அமெரிக்காவிலே மருந்து குடிக்கிறதுக்கு (கடல் கடந்தும் இது போயிருச்சா? அட அநியா யமே!) இந்தியாவிலே மொறை வாங்கிக்கிருங்க. இல்லாதவுக ளுக்கு இது வீண் செலவு தான். ''

'' சடங்குப் பெட்டியெல்லாம் வைக்கச் சொல்ருங்களே, பெண் ணுக்கு மாமியார் நாத்திமார்னு 5, 6 பேர் இருந்தா என்னுவது? ''

'' நல்ல வேளை. எங்க பக்கம் அதெல்லாம் இல்லே. பெண்ணப் பெத்தவங்களுக்கு அதெல்லாம் தண்டச் செலவு. அதுக்குத் தான் நாங்க சடங்குப் பெட்டி முறை இல்லாத பக்கமா மாப்பிள்ளைதேடு ரேும் ''

'' இந்த விளையாட்டுப் பெட்டி வேவு... ''

'' பெண்ணைப் பெத்தவங்க கிட் டே பணம் பிடுங்குறதுக்கு அது வும் ஒரு வழி. ஒரு பெண்ணு இருந்தா, கொடுக்கலாம் ''

'' பாங்கிலே வேலை பார்க்கிற பையனு எல்லாரும் மாப்பிள்ளையா தேடுருங்களே எது எதுக்காக? ''

'' நல்ல உத்தியோகம்; நல்ல சம்பளம்; அழுக்குப் படாத வேலே; நேரா நேரத்திற்கு வீட்டுக்கு வந் துட்ருங்க. அது தாங் காரணம் ''

'' மாப்பிள்ளைப் பலகாரங்கள் செஞ்சு கொடுப்பது பத்தி... ''

'' பொண்ணைப் பெத்தவங் களுக்குச் செரமம்; அனுவசியச் செலவு. இதனுலே காரைக்குடிப் பக்கம் நம்ம ஆச்சிமார்கள்லே 2, 3 பேருக்கு நல்ல பொழப்பு நடக் குது ''

'' நம்ம பொண்ணுக எதுவரை படிக்கலாம்? உங்க அபிப்பிராயத் தைச் சொல்லுங்க ''.

'' ஒரு பட்டம் வாங்குகிற அளவு படிச்சாப் போதும். அதுக் குமேலே படிச்சாலும் நம்மள்ளே அதிகமா வேலைக்கு அனுப்புற தில்லேயே... ''

'' உங்க வீட்டுலே மதுரையா சிதம்பரமா? ''

'' நாங்க ஒருத்தருக் கொருத்தர் கலந்து ஆலோசிச்சுத்தான் எதை யும் செய்வோம். அதனுலே இங்கே மதுரைதான். ''

(இதுவரை அமைதியாகக் கவனித்துக் கொண்டிருந்த அவ ரது கணவர் திரு. மெய்யப்பன் மதுரை என்றதும் வாய்விட்டுச் சிரிக்கிருர்.)

'' கடைசியா ஒண்ணு. பணக் காரங்க தேவைக்குப் போக வெச் சிருக்க பணத்தை நல்ல வழியிலே செலவு செய்ய உங்க யோசனை என்ன? ''

'' பணக்காரங்க படிப்புக்கு வசதியில்லாதவங்களுக்கு உதவி செய்யலாம். கல்யாணம் ஆகாத பொண்ணுகளுக்கு ஊர் வாரியா பணங்கொடுத்து செஞ்சு வைக் கலாம். நம்மவங்களுக்கு உள்ள நல்ல மனசே, அவங்களுக்கு குறையில்லாத வாழ்க்கையைக் கொடுக்கும் ''

## கண்ணுத்தாள் ஆச்சி

(நாட்டரசன்கோட்டையில் பிறந்து பாகனேரியில் வாழ்க்கைப் பட்டவர்கள். இவர்களது கணவர் இராம. முத்துப்பழனியப்ப செட்டி யார் அவர்கள் மதுரையில் நூல்க் கடை உரிமையாளர்.)



''எங்க வீட்டுலே நான் மருந்து குடிக்கலே. எனக்கு ரெண்டு புள்ளைகள் பொறந்திருக்கு. நாங்க நல்லாத்தான் இருக்கோம்.''

மீனாட்சி ஆச்சி
ஆவினிப்பட்டி

''எங்க பக்கம் சடங்குப் பெட்டி இல்லே. அதுக்குத்தான் நாங்க சடங்குப் பெட்டி முறை இல்லாத பக்கமா மாப்பிள்ளை தேடுரோம்.''



சிவகாமி ஆச்சி
காரைக்குடி

''செட்டியார்களுக்கு சம்பாதிக்கத் தெரியும். ஆச்சிமார்களுக்குச் செலவழிக்கத்தான் தெரியும்''



கண்ணாத்தாள் ஆச்சி
பாகனேரி



''காதல்ங்கிறது ஒரு வகை உணர்ச்சியாலே ஏற்படுது. உணர்ச்சிக்கு அடிமைப்பட்டு கலியாணம் செஞ்சுக்கிறது, ரொம்ப நாளைக்கு நீடிக்கும்னு சொல்ல முடியாது.''

அழகம்மை ஆச்சி
முதலைப்பட்டி

‘‘நம்ம வீட்டுக் கலியாணங்கள்லே செலவு, சுருக்கமா இருக்க என்னென்ன செய்யலாம்?’’

‘‘மாமியார் சாமான் சீதனமெல்லாம் கொடுக்காமே பொண்ணுக்கு ஒரு சேலை, ஒரு தாலி செஞ்சுகொடுத்துதிருப்பூட்டலாம். பொண்ணு வீட்டுலே ஒரு வேளைப் பலகாரமும் சாப்பாடும் போடலாம். பெண்ணழைப்புச் சாப்பாடு தேவையில்லே. இதை மாப்பிள்ளே வீடு ஒத்துக்கணும். எல்லாத்துக்கும் கட்டுப்பாடுகொண்டு வந்தா நல்லது தான்’’

‘‘பொண்ணுக்குக் கழுத்தூரு தேவைதானா?’’

‘‘அது மங்கலமான நகை. அதனாலே அது தேவைதான். நம்ம பக்கத்துலே நம்ம கிட்டே இருக்கறது மத்தவங்களுக்குத் தெரியட்டும்னு கழுத்தூரை எடுத்துப் போட்டுக்கிருங்க. செய்றவுக 30, 40 வெராகன் எடையிலே செஞ்சாப் போதும்’’

‘‘பணக்காரங்க கலியாணம், மத்த விசேடங்களைப் பெரிசா செஞ்சுடருங்க. அதைப் பாத்துத் தான் மத்தவங்களும் செய்யருங்க. அதனாலே பணக்காரங்க வழி காட்டியா எதையும் செஞ்சா என்ன?’’

‘‘செய்யலாம். ஆனா செய்யுறவங்களை நாம என்ன பண்ண முடியும். இல்லாதவுக பணக்காரங்களுக்குப் போட்டியா செலவு செய்யறது தப்புத்தான்.’’

‘‘நம்ம வீடுகள்லே ஆச்சிமார்கள் சொல்றபடி செட்டியார்க கேக்கிருங்களே, அது ஏன்?’’

‘‘அடுப்படியிலே சோறு போடுறது ஆச்சி தானே! அதுனாலே தான் அப்படி. பொதுவாப் பாக்கப்போனா சம்பாதிக்க செட்டியார்களுக்குத் தெரியும்; ஆச்சிமார்

களுக்கு செலவழிக்கத் தான் தெரியும்.''

''போருக்கு எடுத்து வைக்கிறேன்னு சொல்றுங்களே அதெல்லாம் தேவையா?''

''மகனோ, மகளோ பேரனோ பேத்தியோ பொறந்தா போரு கேக்க வர்றவங்களுக்கு முன்னே யெல்லாம் பூ, கேக், கலர் எல்லாம் கொடுப்பாங்க. இப்ப எங்க பாகனேரி பக்கம் அதெல்லாம் நின்னு போச்சு. மத்த ஊர்கள்ளே எப்படின்னு தெரியல்லே.''

''செலவே இல்லாம கலியாணம் நடக்கணும்னா என்ன செய்யணும்?''

''ஒண்ணு சிக்கனமா கோயில்கள்ளே கல்யாணம் நடத்தணும்; இல்லேன்னா மாப்பிள்ளையாப் பாத்து 'எனக்கு வருமானம் வேண்டாம்; இந்தப் பொண்ணை நான் கட்டிக்கிறேன்'னு வரணும். அப்பத்தான் செலவு இல்லாமெ கல்யாணம் நடக்கும்.''

''இழவு வீடுகள்ளே பிணத்தைப் போட்டுக்கிட்டு பலகாரம், சாப்பாடுன்னு திரிகிற அநியாயம் எப்ப மாறும்?''

''இப்ப அதெல்லாம் கட்டுக் கடங்கியிருக்கு. நீங்க நெனைக்கிற மாதிரி இல்லே. ஆனால் இழவு கேக்க வர்றவுகளுக்கு சட்டி சாமான்னு கொடுக்கிறது தேவையில்லே.''

''கடைசியா ஒண்ணு; ஆம்பளப் புள்ளையில்லாத வீட்டுலே செட்டியாரோ ஆச்சியோ செத்துப் போனா அவுங்க பொண்ணு கொள்ளி வைக்கலாமா?''

''வெச்சா ஒண்ணும் தப்பில்லே. பல வீடுகள்ளே பொண்ணு கொள்ளி வெச்சிருக்குதுகளே.''

# அழகம்மை ஆச்சி

(முதலைப்பட்டியில் பிறந்து உள்ளூரிலேயே வாழ்க்கைப்பட்டவர். இவரது கணவர் திரு. ஆர்எம். ஏகப்பன் இந்தோராம் பயோ கெமிக்கல்ஸ், போட்டோ ஸ்டெட் நிறுவனங்களின் உரிமையாளர்)

''உங்க பக்கங்களே பொண்ணு பாக்கற வழக்கம் உண்டா?''

''உண்டு. ஆனா...பொண்ணை அவங்க வீட்டுக்குப் போய் பாக்க மாட்டாங்க - அடுத்த வீடுகளுக்கு கூட்டியாரச் சொல்லி பாப்பாங்க''

''உங்களை பொண்ணு பாத்துத்தான் உங்க ஆம்பிளையானுக்குக் கட்டி வெச்சாங்களா?''

''இல்லே. அவங்க எனக்கு ஏற்கனவே சொந்தம்...''

''காதல் கல்யாணம் — நம்ம சாதிக்குள்ளேயே செஞ்சுக்கிறதை நீங்க விரும்புறீகளா?''

''அது நல்லதில்லே. காதல்ங்கிறது ஒரு வகை உணர்ச்சியாலே ஏற்படுது. உணர்ச்சிக்கு அடிமைப் பட்டுச் செஞ்சுக்கிறது ரொம்ப நாளைக்கு நீடிக்கும்னு சொல்ல முடியாது. அதனாலே பெரியவங்க பாத்து சேஞ்சு வைக்கிறதுதான் நல்லது. விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு உள்ளவுங்களும் தியாக மனப்பான்மை உள்ளவுங்களும் ஓரளவு இதிலே வெற்றி யடையலாம்.''

(இவரது கணவர் திரு. ஏகப்பன் இடையிடையே உதவுகிறார்)

''உங்களுக்கு எத்தனை புள்ளைங்க...?''

''மூணு அரசு.''

''அட தேவலையே! எல்லாமே வாங்கிக்கிற வகைதான்; கொடுக்கிற பிரச்னையே இல்லே. ஆமா நீங்க உங்க அரசுகளுக்கு சீதனம் மாமியார்சாமான், அது இதுன்னு கேட்டு பணம் வாங்குவீங்களா? இல்லை...கலியாணச் சமயத்திலே தான் முடிவெடுப்பீங்களா?''

''நாங்க பணத்தைப் பெரிசா நினைக்கல்லே. நல்ல பொண்ணுகளா இருந்தா கால மாறுதலுக்குத் தோதா செஞ்சு வைப்போம்''


''பொண்ணு வீடுகளை அச்சுறுத்துர இந்த முறைதலைகள் கூடிக்கிட்டே போறதுக்கு யாரு காரணம்?''

''ஆச்சிமார்கள் தான் காரணம். வசதியா உள்ளவுகளுக்கு பணம் ஒரு பொருட்டு இல்லே. பலபேரு தற்பெருமைக்காகச் செய்யறப்போ வசதி இல்லாதவுக செரமப்படுருக. ஆச்சிமார்க மனதுலே மாற்றம் ஏற்படாதவரை இந்த மொறைதலைகள் குடுக்கிறது வாங்கிறதை மாத்த முடியாது.''

''வாழா வெட்டினு சொல்ருகளே அவுங்களுக்கு மறுமணம் செஞ்சு வைக்கலாமா?''

''நல்லாச் சேஞ்சு வைக்கலாம். அப்படிச் சேஞ்சு வெச்சா ஒதுக்கி வைக்கிற தைரியம் மாமியார் வீட்டுக்கு வராது. சில ஆம்புளைங்க வீம்புக்காக நல்ல பொண்ணுகளைக் கூட ஒதுக்கீருருங்க. இப்படிச் செய்யறதுனாலே சமுதாயம் சீர்திருந்தரதோட இப்படிப்பட்ட அநியாயங்க தொடராது.''

**பேட்டி: எல். சுந்தரம்**



# உங்கள் குரல்...

### பேட்டி அருமை

சிறப்புச் செய்திகளை வண்ணத்தில் வெளியிட்டிருந்த விதம் கண்களைக் கவர்ந்தது. அனைத்தையும் விட காரைக்குடி நாராயணனின் பேட்டி சிறப்பாக இருந்தது. ஆச்சிகள் பேட்டியும் அருமை. தமிழ் மகன் பழ. கருப்பையா அவர்கள் மொழி விஷயத்திற்கு அளித்த பதில் அருமை; உண்மை.

தி. வளையாபதி
கோநகர்

### வாழையடி வாழையாகத் தொடரட்டும்

''நீ என்ன கோயில்?'' என்று கேட்டால் ''முருகன் கோவில்'' ''பிள்ளையார் கோவில்'' எனக் கூறும் நம் இளைஞர்களுக்கு நம் இனத்தைப் பற்றி அறிந்து கொள்ள 'வாழையடி வாழை' தொடர் உதவியாக இருக்கும் என நினைக்கிறேன். ஆச்சிமார்களின் பேட்டி வரவேற்கத்தக்க பகுதி. பழ. கருப்பையாவைப் போன்று உத்வேகம் கொண்ட இளைஞர்களைக் கொண்டு ஒவ்வொரு இதழையும் தயாரிக்கச் செய்யலாமே!

சொ. வள்ளியப்பன்
திருப்புத்தூர்

### தனிச் சன்னிதானம்

அக்டோபர் இதழ் அட்டையில் ஸ்ரீ மீனாட்சியம்மன் திருக்கல்யாணப் படத்தையும் உள்ளே 'மணக்கோல மீனாட்சிக்குத் தனிச் சன்னிதானம்' பற்றிய செய்தியையும் கண்டு உள்ளம் மகிழ்ந்தேன். 'செட்டிநாட்டு இளவரசர்' திரு.வி. என். சிதம்பரம் நினைத்ததை முடிப்பவர் என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும்.

ஆ. சொ. ஆண்டியப்பன்
விராலிமலை

### புதுமைப் பொலிவு

அக்டோபர் இதழ் புதுமைப் பொலிவுடன் இருக்கிறது. ஆச்சிமார்களின் பேட்டிக் கட்டுரை அற்புதம்.

குமா. கரு. சுந்தரம்
குருவிக்கொண்டான்பட்டி

### அட்டகாசமய்யா...

''நகரத்தார் குரல்'' அக்டோபர் மாத இதழைப் படித்துப் பரவசமடைந்த பலருள் நானும் ஒருவன். பழ. கருப்பையா அவர்கள் குறிப்பிட்டுள்ளபடி ''நகரத்தார் குரல்'', இனி வீசைக்குப் போட முடியாத விஷயமுள்ள புத்தகம் என்பதில் சிறிதும் ஐயமில்லை. செட்டிநாட்டில் ஆட்சி செலுத்தும் ஆச்சிமார்களின் பேட்டி அட்டகாசமாக இருக்கிறது. பழ. கருப்பையா அவர்களுக்கு என் அன்புப் பாராட்டுக்கள். அறப்பணி, பொதுப்பணிகளுக்கிடையில் இப்படியொரு சிறப்பான இலக்கிய

இதழை வெளியிட்டு வரும் திரு, வி. என். சிடி அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

ஏ ஆர். சுந்தரம்
திருச்சி

### தெளிவான மீனாட்சி ஆச்சி

மகளுக்கும், மருமகளுக்கும் வேறுபாடு காட்டி மருமகளே சிறந்தவள் என்று தெளிவான கருத்தைக்கூறிய திருமதி மீனாட்சி முத்தழகப்பன் அவர்களின் பேட்டியே மிகச் சிறந்தது.

கே. கிருஷ்ணப்பன் எம். ஏ.
மதுரை

### வரலாற்றுப் படைப்பு

'வாழையடி வாழை' உண்மையான வரலாற்றுப்படைப்பு. ஆறு ஆச்சிமார்களின் பேட்டியும் கருத்துரையும் சிறப்பாக உள்ளன. மாதா மாதம் இப்பணி தொடரட்டும். காரைக்குடி நாராயணனை எல். சுந்தரம் பேட்டி கண்டு எழுதியிருப்பது சிறப்பு. பேட்டி இன்னும் விரிவாக இருந்தால் என்ன?

ஜெய்ஹிந்த்
சேதுராமன் செட்டியார்
கோனபட்டு

### சிண்டு முடியும் வேலை

ஏன் சார் எத்தனை நாளா இந்த சிண்டு முடியற வேலை? சும்மா ஒத்துமையா இருக்கிற மாமியார் மருமகளையெல்லாம் வம்பு தும்பிலே மாட்டி விட்டுடுவீங்க போல இருக்கே!

வ. கண்ணப்பன்
ஆவினிப்பட்டி

### பெண்கள் குரல்

அக்டோபர் இதழ் நகரத்தார் குரலா? இல்லை! பெண்கள் குரல் என்பதே உண்மை! பேட்டி சிறப்பாக உள்ளது. மானி தாக்கல் முக்கியமான தாக்கல்.

யோக நடராஜன்
ஆ. தெக்கூர்

### மணி மகுடம்

புத்தம் புது மலராய்ப் பூத்துக் குலுங்கும் நகரத்தார் குரலுக்கு ஆச்சிமார்களின் பேட்டி மணி மகுடமாய்த் திகழ்கிறது.

வி. ஆர். சின்ன அருணாசலம்
தேவகோட்டை

### படு அமர்க்களம்

நகரத்தார் குரல் வெண்கலமாக ஒலிக்கிறது. 'நாம் படிப்பது நகரத்தார் குரலா' என்பதை என்னால் நம்பமுடியவில்லை. ஆச்சிமார்களின் பேட்டி படுஅமர்க்களம் போங்கள்.

நாக. சுப்பையா
சித்தாபூர்

### வெகு சிறப்பு

அக்டோபர் மாத "நகரத்தார் குரல்" வெகு சிறப்பாக அமைந்துள்ளது. ஆசிரியருக்கு என் மனமார்ந்த பாராட்டுக்கள்.

மு. லெட்சுமணன்
ஆவினிப்பட்டி

---

நல்ல அட்டையொடு
வாழையடி வாழையொடு
அயோத்தி விவரமுடன்
பதிலாய் கட்டுரைகள்பலதந்த
நம்மமானி தாக்கல் சொல்லி
கண்ணீர்க் கதை தாங்கி
ஆச்சிமார் பேட்டி தந்து
கருப்பையா வாழி!

மேலை பழநியப்பன், மேலைச்சிவபுரி.

91/1

# "அரசனுவா மகன்கள் உறங்க விடமாட்டேங்கிருங்களே!"

நவராத்திரி விழா மதுரை மீனுட்சியம்மன் கோயிலில் கோலாகலமாக நடக்கிறது. மதுரையே கோயிலுக்குக் குடி பெயர்ந்துவிட்டது போலிருக்கிறது.

மீனுட்சி பள்ளியறைக்குப் போகச் சுணங்குகிறது. அன்னை சிணுங்குகிருள்; அவளால் எதையும் தாங்கிக்கொள்ள முடியும்; ஆனுல் பள்ளியறை நேரம் தள்ளிப் போவதை மட்டும் தாங்கிக் கொள்ள முடியாது.

சொக்கி சொக்கனிடம் முணங்குகிருள்: ''இந்தச் சிதம்பரம் வந்த நாளா, ஒரு நாளாவது காலா காலத்திலே உறங்கினமின்னு இல்லே! தினம் திருவிழாவாத்தான் இருக்கு! இந்தச் சிதம்பரம் அசர்றதேயில்லே!''

மழலே மொழிகிருள் அன்னை. அவளுடைய சிவந்த உதடுகள் உரசி உரசி வெளுத்துப் போகின்றன. வெளுத்திருந்த விழிகள் இரவெல்லாம் விழித்துச் சிவந்து போகின்றன. மீளா மயக்கம்.

கதவு தடதடவென்று தட்டப்படுகிறது.

''யாரு?''

''நான்தான்''

மீனுட்சி புருவத்தை நெறிக்கிருள்.

ஈசன் சொல்கிருர்: ''சொக்கலிங்கம் போலேருக்கு!''

''எந்தச் சொக்கலிங்கம்?''— ஆம்பிளையான் பெயரை அழுத்திச் சொல்கிருள் மீனுட்சி.

''ஏதேது... இன்னம் கொஞ்ச நாளானு பேரைச் சொல்லியே கூப்பிடுவாய் போலேருக்கே!'' மீனுட்சி தலையில் ஈசன் ஒரு செல்லக் குட்டுக் குட்டுகிருர்.

மீண்டும் கதவு தடதடவென்று தட்டப்படுகிறது.

மீனுட்சி வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்திருக்கிருள்; கலேந்து கிடந்த தலேமயிரை ஒழுங்குபடுத்திக் கொள்கிருள்.

''ரவைக்கு நேரத்தோட படுப்பமின்னு வ. நா. சிதம்பரம் விடுறதில்லே! காலேயிலே சத்தபடத்துக்குக் கூடத் தூங்குவமின்னு கருமுத்துச் சொக்கலிங்கம் விடுறதில்லே! இந்த அரசனுவா மகன்கள் உறங்கவிட மாட்டேங்கிருங்களே!''

மீனுட்சி பெருமையாகச் சலித்துக் கொள்கிருள்; சொக்கர் புன்முறுவல் பூக்கிருர்.

(நகரத்தார்களின் பக்தி பற்றி
மதுரை நகரத்தார் சங்கக்
கூட்டத்தில் பழ. கருப்பையா)

---

ஒக்கூர் மிகச் சிறிய ஊர். எங்களூரைச் சேர்ந்த நகரத்தார் எல்லோரும் வேறு வேறு ஊர்களில் தர்மம் செய்திருக்கிருர்கள். ஆனுல் உள்ளூரிலேயே தர்மம் செய்கிற பாக்கியம் என் தகப்பனுருக்குக் கிடைத்தது. என் தந்தை கெட்டிக்காரர்; என்ருலும் பணத்தை அதிகமாகச் சம்பாதிக்கவில்லே. மாருகப் பெருமையைச் சம்பாதித்து வைத்திருந்தார். அவர்கள் எனக்கு விட்டுச் சென்றது கலேத்தந்தை அவர்களது நட்பும் ராஜா சர் அவர்களது நட்புந்தான். அவை எனக்குப் பெரிய சொத்துக்கள்.

—சிக. அரு. சோம. இராமநாதன்
செட்டியார்

(மதுரை நகரத்தார் சங்கப்
பாராட்டுக் கூட்டத்தில்)

# ...நம்மவரில் ஒரு பாடகி...



நம்மவரில் தாலாட்டுப் பாடும் பெண்கள் அநேகம்; ஆனுல் இன்னிசைக் கச்சேரி செய்யும் பெண்கள் அபூர்வம். அந்த அபூர்வப் பெண்களில் ஒருவர் எம். எல். வள்ளியம்மை ஆச்சி ஆவார். இவர் சொக்கலிங்கம்புதூரில் பிறந்து காரைக்குடியில் வாழ்க்கைப்பட்டவர். இவரது கணவர் பெயர் முத்து லெட்சுமணன்.

அண்மையில் மதுரைக்கு வந்திருந்தபோது அவர் நமது பத்திரிகைக்கு மகிழ்ச்சியுடன் பேட்டியளித்தார். அப்போது—

## பேட்டி: எல்.சுந்தரம்

''இசைக் கச்சேரி செய்யவேண்டும் என்ற ஆர்வம் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?'' என்று கேட்டபோது—

''1974 ஆம் ஆண்டு என்று நினைவு. எனக்குத் தொண்டையில் கட்டி இருந்தது. வேண்டிக்கொண்டபடி நான் பழநிக்கு வழி நடைப் பயணமாகச் சென்றேன். போகும்போது பக்திப் பாடல்களை வழிநெடுகப் பாடிக்கொண்டே சென்றேன். இதுபோல் மேலும் இரண்டு ஆண்டுகள் தைப் பூச விழாவிற்குச் சென்று வந்தேன். என்னேடு வந்தவர்கள் கொடுத்த ஊக்கம், என் இசை ஆர்வத்திற்குத் தூண்டுகோலாக அமைந்தது'' என்ருர்.

''அதையடுத்து என்ன முயற்சி மேற்கொண்டீர்கள்?''

''இசையின் மீது கொண்ட பற்றுக் காரணமாக நான் பத்து மாத



காலம் சூலமங்கலம் சகோதரிகளிடம் பக்திப் பாடல்களைப் பாடுவதற்குப் பயிற்சி பெற்றேன். அதனுல் பாடுவதில் பக்குவம் ஏற்பட்டது. திருமுருகன் பேரருளாலும் கண்டனூர் பழனியப்ப செட்டியார் (சாமியாடிச் செட்டியார்) அவர்களின் நல்லாசியாலும் 1975

ஜனவரியில் பழநி ஆண்டவர் மலைக் கோயிலில் எனது இன்னிசைக் கச்சேரி அரங்கேற்றம் செய்யப்பட்டது.''

''கர்நாடக இசையில் பயிற்சி ஏதும் பெறவில்லையா?''

''கர்நாடக இசையை முறையாகக் கற்றுக்கொள்ள விரும்பி சென்னை அடையாறில் உள்ள தமிழக அரசு கர்னாடக இசைக் கல்லூரியில் 'சங்கீத வித்வான்' பட்டம் பெற மூன்றாண்டுகள் பயின்று, தேர்வு எழுதியிருக்கிறேன். தேர்வு முடிவை எதிர் பார்த்து இருக்கிறேன்.''

''சக்தியின் பக்திப் பாடல்களைப் பாமர இசையில் பாடி என்னுடைய பக்தியைப் பரப்பு மகளே! அதுவே எனக்குப் பேரானந்தத்தைக் கொடுக்கும்'' என மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி, தனக்கு அருள்வாக்கு வழங்கியதாகவும் அதன்பிறகே தனது இசைக் கச்சேரிக்கு பல ஊர்களில் வாய்ப்புக்கள் கிடைத்ததாகவும் கூறும் இவர், அம்மன் புகழைப் பரப்புவதற்காகவே, தான் இசைக் கச்சேரிகள் செய்து வருவதாகக் கூறுகிறார். மேல் மருவத்தூர் ஆதி பராசக்தி கோவிலில் நடைபெற்ற நிகழ்ச்சி யொன்றில் தமிழக அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு ஆர் எம். வீரப்பன் அவர்கள் இவருக்குப் பொன்னாடை அணிவித்துக் கௌரவித்திருக்கிறார்கள்.

கர்நாடக இசையை எல்லோரும் உடனே பாடமுடியாது என்றும் சொற்களின் பொருளைப் புரிந்துகொள்வது சிரமம் என்றும் பொருள் மனதில் பதிந்துவிட்டால் பாடுவது எளிது என்றும் கூறுகிறார் இவர்.

வள்ளியம்மை ஆச்சியின் முதல் இன்னிசைக் கச்சேரி ஆத்தங்குடி லோகநாயகி அம்மன் கோவில் பூச் சொரிதல் விழாவில் நடைபெற்றது. அதன்பிறகு பள்ளத்தூர், கோனபட்டு, கோயமுத்தூர், கீழ் பெண்ணத்தூர், திருப்பத்தூர், விழுப்புரம், சிதம்பரம், சென்னை என்று மாறி மாறி இது வரை 30க்கும் மேற்பட்ட இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. சென்னை வானொலியின் 'வந்தனை செய்வோம்' 'இசையமுதம்' நிகழ்ச்சிகளில் இவரது குரல் அடிக்கடி ஒலிக்கிறது. டி. வி.யில் 'வயலும் வாழ்வும்' பகுதியில் இவரது நிகழ்ச்சி இருமுறை ஒளிபரப்பப்பட்டுள்ளது.

பாடும் பணியை இறைவன் இட்ட பணியாகக் கொண்டு அதைச் செம்மையாகச் செய்து வருவதாகப் பக்திப் பரவசத்தோடு கூறும் இவர், தமிழர்கள் வாழும் எல்லா இடங்களிலும் - குறிப்பாகச் செட்டிநாட்டில் ஊர் தோறும் தனது இன்னிசைக் கச்சேரி நடைபெறவேண்டுமென்பதும் செட்டிநாட்டுப் பெண்மணிகள் பலர் இசைத்துறைக்கு வர வேண்டுமென்பதும் தனது ஆவலும் எதிர்பார்ப்பும் ஆகும் என்று கூறுகிறார்.

வள்ளியம்மை ஆச்சியின் ஆவல் நிறைவேற நாமும் வாழ்த்துவோம்.

### நல்லவை

தாயைப் பார்த்து
பெண்ணெடு
தரத்தைப் பார்த்து
வரவிடு
நிலத்தைப் பார்த்துப்
பயிரிடு
நேரம் பார்த்து
முடிவெடு

—''எவர்பிரைட்''




# வேந்தன்பட்டி

தே. சுப்பிரமணியன், கார்த்திகைமடம்.

''நல்லார் ஒருவர் உளரேல் -
அவர் பொருட்டு
எல்லோருக்கும் பெய்யும்
மழை'' என்ற

திருவள்ளுவரின் கூற்றுக்கு ஏற்ப நல்லோர்கள் நிறைந்தது எங்கள் ஊரான வேந்தன்பட்டி.

புதிதாகத் தோன்றி புகழ் பல பெற்று வரும் புதுக்கோட்டை மாவட்டம், வார்ப்பட்டு வட்டத்தில், பொன்னமராவதிக்கு அருகில் அழகுற அமைந்துள்ளது எங்கள் ஊரான வேந்தன்பட்டி.

இளையாற்றங்குடி, வைரவன் கோயில், மாற்றூர், நேமங் கோயில், இலுப்பக்குடி, இரணிக்கோயில் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த 580 புள்ளி நகரத்தார் இங்கு இருக்கிறார்கள்.

வேந்தன்பட்டியின் புகழுக்கோர் மகுடமாகத் திகழ்வது இங்குள்ள மீனாட்சி சொக்கலிங்கேஸ்வரர் திருக்கோயிலாகும். இக்கோயில் அடிமட்டத்திலிருந்து முற்றிலும் புதிதாக, இராஜகோபுரத்துடன் இப்பொழுது எழுப்பப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதன் திருக்குட நன்னீராட்டு விழா கூடிய விரைவில் நடைபெற இருக்கிறது. இந்தக் கோயிலில் உள்ள நந்தி மிகவும் புகழ் பெற்றது. மேலும், இங்கு தண்டாயுதபாணி கோயில், பிள்ளையார் கோயில், ஐயனார்கோயில் மற்றும் சில கோயில்களும் உண்டு. வேந்தன்பட்டி, மாற்றூர் கோயிலைச்சார்ந்த நகரத்தார் பாப்பாத்தி அம்மனை தெய்வமாகக் கொண்டு படையல் வீடு வைத்து படையல் நடத்தி வருகிறார்கள். இங்கு தண்டாயுத பாணிக்காக தனிக் கோயில் எழுப்பப்பட்டுள்ளது. இங்கு நடைபெறும் திருவிழாக்களுள் குறிப்பிடத்தக்கது வைகாசித் திங்களில் நடைபெறும் வைகாசி விசாகப் பெருவிழாவாகும். மேலும், புரவி எடுப்பு, மகரநோன்பு போன்ற விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. பங்குனிஉத்திரத் திருவிழாவில், ஏழை எளியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

முற்றிலும் இளைஞர்களின் கூட்டு முயற்சியால் நடத்தப்பட்டு வரும் 'இளைஞர் நற்பணி மன்றம்' எங்கள் ஊருக்கு பல்லாற்றானும் நன்மை புரிந்து வருகிறது. அரசாங்கக் கிளை நூலகமொன்றும் அஞ்சல் அலுவலகமும் நன்முறையில் இயங்கி வருகின்றன.

மேலும், எங்கள் ஊரின் சுற்றுப்புறங்களில், மாப்படைச்சான் ஊரணி, சேங்கை, ஆறுமுகஞ் செட்டி ஊரணி, துர்க்கை செட்டி ஊரணி, என்னும் ஊரணிகள் எங்களுக்கு குடிநீரை அளித்து, ஊருக்குச் செழிப்பையும் தருகின்றன. நீராடுவதற்கென ஊரின் நடுவில் சிவன் கோயில் ஊரணி உள்ளது.

இராமசாமி செட்டியாரவர்கள் பசுமடம் ஒன்றை நிறுவி இறைவனது அபிஷேகத்திற்கான பாலை தர்மமாக வழங்கி வருகிறார்கள். நா. சுப. நாகப்ப செட்டியாரவர்கள் குடும்பத்தினரால் மாதந்தோறும் கார்த்திகை நாளன்று அன்ன தானம் வழங்கப்பட்டு வருகிறது. ஊரின் நடுவில், வாசகசாலையும். நாடக மேடையும், நகரத்தார் விடுதியும் உள்ளன. 'டவுன் கிளப்' ஒன்று நடைபெற்று வருகிறது. இங்கு மூன்றில் ஒருபாகம் படித்தவர்கள் வாழ்கிறார்கள். நாட்டுக்கோட்டை நகரத்தாரும், அம்பலகாரர்களும், மற்றும் வேறு சில இனத்தவரும் வாழ்ந்து வரும் எங்கள் ஊரின் மக்கள் தொகை சுமார் 4000 ஆகும். இங்குள்ள நகரத்தார் சிங்கப்பூர், மலேசியா, கொழும்பு போன்ற நாடுகளுக்கும் அந்தமான் தீவுகளுக்கும் சென்று பொருளீட்டி வருகிறார்கள். இவ்வூரில் வாழும் நகரத்தார் மிகவும் பக்தியுடையவர்களாகத் திகழ்கிறார்கள். இங்கு பருவ மழை தவறாமல் பெய்கிறது.

திரைப்படத் துறையில் எங்கள் ஊரைச் சேர்ந்த வேந்தன்பட்டி அழகப்பன் அவர்கள் இயக்குனராகப் பணியாற்றி வருகிறார். சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராகப் பணி புரியும் டாக்டர் மெ. சுந்தரம் அவர்களும், 'ஜெமினி சினிமா' இதழின் நிர்வாக ஆசிரியர் பழனியப்பன் இராமசாமி அவர்களும் எங்களூரின் பெருமைக்கோர் சான்றாகத் திகழ்கிறார்கள். 'தாலாட்டுக் கவிஞர்' டி குமரப்பனும் எங்களூரைச் சேர்ந்தவரே.

எங்கள் ஊருக்கு அருகில்உள்ள திருக்குளம்பூர் ஸ்ரீ வைத்தினாத சுவாமி திருக்கோயில் மிகவும் வரலாற்றுச் சிறப்புடையதாகும்.

பண்டிதமணி போன்ற அரும் பெரும் புலவர்களைத் தோற்றுவித்த 'சன்மார்க்க சபை' எங்கள் ஊருக்கு அருகில் உள்ள மேலைச் சிவபுரியில் உள்ளது.

இவ்வாறாக, பலவகைச் சிறப்புகளையும் பெற்ற எங்கள் ஊர் மக்கள், இன்னும் பல சிறப்புகளைப் பெற்று, பல்லாண்டு வாழ அருள் மிகு நந்தீஸ்வரரை வணங்குகிறோம்.

## பத்திரிகையின் கதை

முதன் முதலாக வெனிஸ் நகரத்தில்தான் பத்திரிகை தோன்றிற்று. 1633 ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் 'பப்ளிக் இன்டலிஜென்ஸ்' என்னும் பத்திரிகை வெளி வந்தது. அதன் பின்பு அரசாங்க செய்தித் தாளாக 'இந்தியா கெஜட்' என்னும் பத்திரிகை இந்திய அரசால் வெளியிடப்பட்டது. 1835 ஆம் ஆண்டில்தான் இந்தியாவில் பத்திரிகை நடத்தும் தொழில் உறுதிப்பட்டது.

— வி. ஆர்.
சின்னஅருணாசலம்,
தேவகோட்டை.

# குச்சனூர் சனீஸ்வரர்

## 'எவர்பிரைட்' காந்திமதி ஆச்சி

இரண்டரை ஆண்டுகட்கு ஒரு முறை நிகழுகின்ற சனிப் பெயர்ச்சிக்குப் புகழ்பெற்று விளங்குவதும் நம் எண்ணத்தின் முன் நிற்பதும் திருநள்ளாறு தலம் ஒன்றுதான். ஆனால் அதற்கு நிகராக உள்ள குச்சனூர் அருள்மிகு சனீஸ்வர பகவான் திருக்கோயிலைப் பற்றி நம்மில் பெரும்பாலோர் அறிந்திருக்கவில்லை. நாடெங்கும்பிரபலமடைய வேண்டியதும் வரலாற்றுச் சிறப்புமிக்கதுமான இத்திருக்கோயிலுக்கு சனிப் பெயர்ச்சியையொட்டி அண்மையில் நான் சென்று வரும் பேறு பெற்றேன்.

நவக்கிரகங்களில் அதிசக்தி வாய்ந்தவரும் நான்கு கரங்களைக் கொண்டவருமான சனீஸ்வரபகவான் கோயில் கொண்டுள்ள தலங்களில் செண்பகநல்லூர் என்று அழைக்கப்பட்ட பழைமையான குச்சனூரின் கீர்த்தியை எல்லோரும் அறிந்து கொள்ள வேண்டுமென்ற உன்னத நோக்கத்திலே இதை இங்கு நான்எழுதலானேன்.

திருநள்ளாற்றில் எழுந்தருளியுள்ள சனி பகவானால் நிடத நாட்டை ஆண்ட நளச் சக்கரவர்த்தி பேறு பெற்றதைப் போல, குச்சனூரில் எழுந்தருளியுள்ள சனி பகவானால் குலிங்க நாட்டையாண்ட தினகரன் என்னும் சக்கரவர்த்தி பேறு பெற்றுள்ளான். நளன் வரலாற்றில் ஊழ்வினை வெல்கிறது; தினகரன் வரலாற்றில் பக்திவெல்கிறது என்ற உண்மை தெரியவருகிறது.

நவக்கிரகங்களில் முதலாவதாக எண்ணப்படுவது சூரிய பகவான். சூரிய பகவானின் புத்திரனே சனி பகவான் என்று கூறப்படுகிறது. சனிபகவான் தல நாயகனாக, முதல் மூர்த்தியாக மற்ற கிரகங்களோடு இணைந்து இல்லாமல் தனித் தெய்வமாக கோயில் கொண்டிருப்பது குச்சனூருக்குப் பெருமை சேர்க்கிறது. சில தலங்களில் தனியாக இருந்தாலும் இங்கு துணைச் சந்நிதியாகவே யுள்ளது—திருநள்ளாறு உள்பட.

குச்சனூர்க் கோயில் மூல ஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கும் மூலவர், சுயம்புவாகத் தோன்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. லிங்க வடிவில் சற்று அகன்றுள்ள இவரது தோற்றம் காண்போர் மனதைக் கவரும் தன்மையுடையதாக இருக்கிறது. மூலவருக்கருகில் உற்சவ மூர்த்தியும் அமைந்துள்ளார். ஆண்டுக்கொருமுறை உற்சவமூர்த்தி பவனி வருவார் என்று கூறப்படுகிறது.

வரலாற்றுச் சிறப்புப்பெறுகின்ற இவ்வூர், பாண்டியநாட்டில் மதுரை மாவட்டம் சின்னமனூர்

(தொடர்ச்சி 36 ஆம் பக்கம்)

# மைமற்ற தாக்கல்கள்...

## "நகரத்தார் குரல்" ஆலோசனைக் குழுக் கூட்டம்

"நகரத்தார் குரல்" பத்திரிகையின் ஆலோசனைக் குழுக் கூட்டம் 28—10—82 அன்று மதுரை பாண்டியன் ஓட்டலில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு இப்பத்திரிகையின் கௌரவ ஆசிரியர், ஆசிரியர், வெளியிடுபவர் ஆலோசனைக்குழு உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் பலர் வந்திருந்தனர். கூட்டத்தில் பத்திரிகையின் வளர்ச்சி மற்றும் நகரத்தார் நலனுக்கு ஆற்ற வேண்டிய பணிகள் பற்றி வாதிக்கப்பட்டது. வந்திருந்தவர்களுக்கு 'கலைமகள்' இராம. நடராஜன் செட்டியார் அவர்கள் விருந்தளித்தார்கள்.

## மதுரை நகரத்தார் சங்கத்தில் பாராட்டு விழா

அண்மையில் மணி விழாக் கண்ட ஒக்கூர் சிக. அரு. சோம. இராமநாதன் செட்டியார் — கண்ணாத்தாள் ஆச்சிக்கு மதுரை நகரத்தார் சங்கத்தின் சார்பில் 29—10—82 அன்று நகர விடுதியில் ஒரு பாராட்டு விழா நடைபெற்றது. இவ்விழாவிற்கு சங்கத் தலைவர் சுப. அ. நடராஜன் செட்டியார் அவர்கள் தலைமையேற்ருர்கள்.

'எவர்பிரைட்' திரு. நாச்சியப்ப செட்டியார் இறைவணக்கம் பாட, செயலாளர் திரு. சொ. சொ. மீ. சுந்தரம் வரவேற்புரை நிகழ்த்திஞர். 'சிவநெறிச் செல்வர்' திரு. கருமுத்து தி. சு. சொக்கலிங்கம் செட்டியார், திரு. எஸ். அரசகேசரி செட்டியார், திரு. பழ. கருப்பையா, டாக்டர் தமிழண்ணல் ஆகியோர் மணி விழாத் தம்பதியரைப் பாராட்டிப் பேசினர்கள். திரு. இராமநாதன் செட்டியார் நன்றி தெரிவித்துப் பேசினர். விழாவின் இறுதியில் மற்ெருரு செயலாளர் திரு. இராம. ஏகப்பன் நன்றி நவின்ருர்.

---

## குச்சனூர் சனீஸ்வரர் (தொடர்ச்சி)

ஊராட்சி ஒன்றியத்திலுள்ளது. கம்பம் பள்ளத் தாக்கில் தற்போது முல்லைப் பெரியாறு என்ற பெயரில் ஓடுவதும் சுரபிநதி என்னும் பழம் பெருமையுடையதுமான சுருளிநதி ராஜவாய்க்காலின் மேற்குக் கரையருகில் அமைந்துள்ளது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முச் சிறப்புக்களையும் கொண்ட குச்சனூரில் 28-10-82 வியாழக்கிழமை மாலையிலிருந்தே பக்த கோடிகள் ஆயிரக் கணக்கில் பெருகி விட்டனர். 29—10—82 வெள்ளிக்கிழமை அதிகாலை 3-12 மணிக்கான சனிப் பெயர்ச்சியின் போது எதிரேயுள்ள சுருளி நதி ராஜவாய்க்காலில் நீராடி, நவக்கிரகங்களில் அதிசக்தி வாய்ந்த அருள்மிகு சனீஸ்வரப் பெருமானை நீண்ட நெடும் வரிசையில் நின்று மூலவர் சந்நிதிக்குச் சென்று, பக்தி சிரத்தையுடன் மக்கள் வழிபட்ட காட்சி கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது.

## திருமணம்

வேந்தன்பட்டி சோம. சுப்பையா செட்டியார் அவர்களின் புதல்வி செல்வி இராமாயிக்கும் புதுப்பட்டி ப. அ. அழ. இராமநாதன் செட்டியார் அவர்களின் புதல்வன் செல்வன் அழகப்பனுக்கும் 2—9—82 அன்று வேந்தன் பட்டியில் திருமணம் சிறப்பாக நடந்தேறியது.

வலையபட்டி எஸ். சேதுராமன் செட்டியார் அவர்களின் புதல்வி செல்வி ஜெயந்திக்கும் வலையபட்டி ஏவி. ஆர் எம். கருப்பையா செட்டியார் அவர்களின் புதல்வன் செல்வன் டாக்டர் இராமநாதனுக்கும் வலையபட்டியில் 20—10—82 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

பள்ளத்தூர் அ. மு. ராம. முரு. சீனிவாசன் செட்டியார் அவர்களின் புதல்வன் செல்வன் பழனியப்பனுக்கும் கண்டவராயன்பட்டி அழ. வ. சி. வள்ளியப்ப செட்டியார் அவர்களின் புதல்வி செல்வி சிவகாமிக்கும் 31–10 82 அன்று கண்டவராயன் பட்டியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

ஆ. முத்துப்பட்டணம் சி. ராம. நா. நா. இராமநாதன் செட்டியார் அவர்களின் புதல்வன் செல்வன் சொக்கலிங்கத்திற்கும் காரைக்குடி டாக்டர் பழ. சபாரத்தினம் செட்டியார் அவர்களது புதல்வி செல்வி தெய்வானை என்ற தேன்மொழிக்கும் 1–11—82 அன்று காரைக்குடியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

பாகனேரி சுப. ஆறு. மாதவன் செட்டியார் அவர்களின் புதல்வன் செல்வன் ஆறுமுகம் என்ற தினகரனுக்கும் பாகனேரி அரு. உல. வயி. சுப்பையா செட்டியார் அவர்களின் புதல்வி செல்வி சிவகாமி என்ற சித்ராவுக்கும் 7—11—82 அன்று பாகனேரியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

ஒக்கூர் மு. சே. லெட்சுமணன் செட்டியார் அவர்களின் புதல்வன் செல்வன் சேக்கப்பன் என்ற ராஜேந்திரனுக்கும் அழகாபுரி தெ. லெ. தே. சாமிநாதன் செட்டியார் அவர்களின் புதல்வி செல்வி சியாமளா என்ற மெய்யம்மைக்கும் 7—11—82 அன்று அழகாபுரியில் திருமணம் சிறப்பாக நடந்தேறியது.

## மணி விழா

'குழந்தைக் கவிஞர்' 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' என்றழைக்கப்படும் அழ. வள்ளியப்பா-வள்ளியம்மை ஆச்சியின் அறுபதாம் ஆண்டு நிறைவு மணி விழா 4—11–82 அன்று பிள்ளையார் பட்டில் சிறப்பாக நடைபெற்றது. மதுரை நகரத்தார் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் சுப. அ. நடராஜன் செட்டியார் அவர்கள் மணிவிழாத் தம்பதியருக்கு மாலை அணிவித்தார்கள். 'நகரத்தார் குரல்' ஆசிரியர் வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்களும் விழாவில் கலந்து கொண்டார்கள்.

## காலமானார்

நாட்டரசன்கோட்டை சுப. சிவ. லெட்சுமணன் செட்டியார் அவர்கள் சில தினங்கள் உடல் நலமில்லாதிருந்து 8–10—82 அன்று காலமானார்கள் என்பதை அறிய வருந்துகிறோம். தர்ம சிந்தனையுடைய அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

நாட்டரசன்கோட்டை மு. பழ. நடராஜன் செட்டியார் அவர்கள் அண்மையில் காலமானார்கள் என்பதறிய வருந்துகிறோம். பிறருக்கு உதவும் நல்ல மனம் கொண்ட அவர்களது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

## தீபாவளி நல்வாழ்த்துக்கள்

❖❖❖❖

''நகரத்தார் குரல்'' வாசகர்களுக்கும், சந்தாதாரர்களுக்கும், விளம்பரதாரர்களுக்கும் மற்றும் பல வகையாலும் எமக்கு ஆதரவளித்துவரும் அன்பர்களுக்கும் எமது உளங்கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

—ஆசிரியர்

## அடையாளப் பெயர்கள்

செட்டிநாட்டுப் பகுதியில், பல நகரத்தார் வீடுகளுக்கு அடையாளப் பெயர்கள் உண்டு. அதுபோல் தேவகோட்டையில் உள்ள சில வீடுகளின் அடையாளப் பெயர்களை இங்கு காணலாம்:

இரட்டை அரு. வீடு
சத்திரத்தார் வீடு
ஜமீன்தார் வீடு
கீழ வீடு
மேல வீடு
மைனர் வீடு
பிலி குளத்தார் வீடு
தொண்டியார் வீடு
மேனு வீடு
கூலிக்கார வீடு
இரண்டாங்கட்டார் வீடு
பூசைக்கார வீடு
பசுமடத்தார் வீடு
பன்ருட்டியார் வீடு
கருரார் வீடு
தென்னைமரத்தார் வீடு
வேந்தன்பட்டியார் வீடு
மாத்துக்கம்மையார் வீடு
கோட்டூரார் வீடு

—வி. ஆர். சின்ன அருணசலம்
தேவகோட்டை


(இதுபோல் மற்ற ஊர்களில் உள்ள நகரத்தார் வீடுகளின் அடையாளப் பெயர்களை எழுதியனுப்பும்படி வாசகர்களைக் கேட்டுக்கொள்கிறோம். தொடர்புடையவர்களின் மனம் புண்படும்படியான பெயர்கள் இருந்தால் அன்பு கூர்ந்து அவற்றைத் தவிர்த்து எழுதியனுப்பிவையுங்கள்.)

### இந்தியாவின்


தேசியச் சின்னம்: அசோகர் கல் ஸ்தூபியும், சிங்கமும் (சாரநாத்தில் உள்ளது)
தேசியப் பறவை: மயில்
தேசிய விலங்கு: புலி
தேசிய மலர்: தாமரை
தேசிய சுலோகம்: ''சத்தியமே ஜெயம்''

— வி ஆர். சின்ன அருணசலம்

மதுரை-625009, கிருஷ்ணபுரம் 4 ஆவது குறுக்குத் தெரு, டோர்நிர். 20ல் உள்ள எக்ஸ்போ பிரிண்டர்ஸில் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் மதுரை, வடக்குச் சித்திரை வீதி, டோர் நிர். 25லிருந்து வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: வி. என். சிதம்பரம்.



விரையாச்சிலை பழ. மு. வெங்கிடாசலம் செட்டியாரவர்களின் குமாரன் பழனியப்பன் B. Com.க்கும் பனையப்பட்டி சி.மு. சின்னையா என்ற சிங்காரம் செட்டியாரவர்களின் குமாரத்தி உஷாதேவிக்கும் 1-9-82 அன்று பனையப்பட்டியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. வாழ்க மணமக்கள்!



ஒக்கூர் சிக. அரு. சோம. இராமநாதன் செட்டியார் – கண்ணுத்தாள் ஆச்சியின் மணி விழா மலரை ராஜா சர் முத்தையா செட்டியார் வெளியிட அதைத் தவத்திரு குன்றக்குடி அடிகளார் பெற்றுக் கொள்ளும் காட்சி.

# நகரத்தார் குரல்

(சமூக இலக்கிய மாத இதழ்)

## உறுப்பினர் கட்டணம்

| | |
|---|---|
| தனி இதழ் | விலை ரூ. 1-00 |
| ஆண்டுக் கட்டணம் (12 இதழ்கள்) | ரூ. 12-00 |

இதுவரை உறுப்பினராகச் சேராதிருப்பவர்கள் அன்புகூர்ந்து கட்டணத்தை பாங்க் டிராப்ட் அல்லது M.O. மூலமாக எமக்கு அனுப்பி வைத்து எமது பத்திரிகையின் வளர்ச்சிக்கு ஆதரவு தருமாறு வேண்டுகிறோம்.

முகவரிகளில் மாற்றம் செய்ய விரும்புவோர் தங்களுடைய உறுப்பினர் எண்ணைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதும்படி கேட்டுக் கொள்கிறோம்.

## விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| அட்டை (வெளிப் பக்கம்) | ரூ. 500-00 |
| அட்டை (உள்பக்கம்) | ரூ. 300-00 |
| முழுப் பக்கம் (இரண்டு வண்ணம்) | ரூ. 300-00 |
| முழுப் பக்கம் | ரூ. 150-00 |
| அரைப் பக்கம் | ரூ. 75-00 |

விவரங்களுக்கு :

25, வடக்குச் சித்திரை வீதி

மதுரை-625001

தொலைபேசி: p. p. 26668